Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஐப்பசி- 08 ஹிஜ்ரி 1428 ரம்ழான் 21 (25.10.2005) செவ்வாய்க்கிழமை இதழ்:25

கோலம்
அபூர்பா
தின்மல்லி

பட்டுவேட்டி, சால்வார் மற்றும் இதர ரக பட்டுப் பிடவைகளுக்கு விஜயம் செய்யுங்கள்

சிவகணேசன் ரெக்ஸ் ரைல்ஸ்

41, பெரிய கடை, யாழ்ப்பாணம். T.P.021 222 2063

# ஐரோப்பிய ஒன்றியத் தலைமையகம் முன் புலம்பெயர் தமிழர்கள் உரிமை முழக்கம்!

## கொட்டும் மழையிலும் 20 ஆயிரம் பேர் அணிதிரள்வு

பிரஷெல்ஸ்

விடுதலைப் புலிகள் மீது விதித்துள்ள பயணத் தடையை நீக்குமாறு கோரி - 20 ஆயிரத்துக்கும் அதிகமான புகலிடத் தமிழ்மக்கள் - நேற்று பெல்ஜியத்தின் தலைநகர் பிரஷெல்ஸில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய தலைமையகம் முன்பாக மாபெரும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியை நடத்தினர்.

இந்தப் பேரணியின் முடிவில் புலிகள் மீதான பயணத்தடை முடிவை கைவிடவேண்டும் எனக் கோரும் மனுவை ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம் எழுக தமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் கையளித்தனர்.

பிரஷெல்ஸ் நகரில் கொட்டும் மழைக்கு மத்தியில் பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் ஒன்றுகூடி உரிமை முழக்கம் எழுப்பினர். (12 ஆம் பக்கம் பார்க்க)




## சந்திரிகா - ரணில் இணைந்து செயற்பட சந்திப்பில் இணக்கம்!

கொழும்பு

தேசிய இனப்பிரச்சினை தீர்வு முயற்சியில் ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து செயற்படுவதென - ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டது.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று இடம்பெற்ற

## எந்தவொரு தரப்பும் தன்னிச்சையாக போர்நிறுத்தத்தை மாற்றமுடியாது!

ரொய்ட்டர் பேட்டியில் புலித்தேவன்

கொழும்பு

போர்நிறுத்த உடன்படிக்கை மற்றும் சமாதானப் பேச்சுக்களில் இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சமதரப்பு என்பதால் - போர்நிறுத்த உடன்படிக்கையை எந்தவொரு தரப்பும் தன்னிச்சையாக மாற்றமுடியாதென விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்தார்.

பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

போர்நிறுத்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட பின்னரான கடந்த மூன்று வருடங்களாக எமது அனுபவத்தின்படி ஐ.தே.கட்சி மீதோ சுதந்திரக் கட்சி மீதோ நாம் வைத்திருந்த நம்பிக்கையை இழந்துவிட்டோம்.

## நாவற்குழிவிபத்தில் ஒருவர் பலி; இருவர் காயம்!

யாழ்ப்பாணம்

நாவற்குழி சந்திக்கு அண்மையாக நேற்றுக் காலை 6.30 மணியளவில் ஓட்டோவுடன் வான் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் மூவர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தில் கல்லடி வீதி - நுணாவிலைச் சேர்ந்த இராமலிங்கம் சதீஸ் (வயது 29) என்பவரே மரணமடைந்தவர் ஆவார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## ரொய்ட்டர் பேட்டியில் புலித்தேவன்

கொழும்பு

போர்நிறுத்த உடன்படிக்கை மற்றும் சமாதானப் பேச்சுக்களில் இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சமதரப்பு என்பதால் - போர்நிறுத்த உடன்படிக்கையை எந்தவொரு தரப்பும் தன்னிச்சையாக மாற்றமுடியாதென விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்தார்.

ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

போர்நிறுத்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட பின்னரான கடந்த மூன்று வருடங்களாக எமது அனுபவத்தின்படி ஐ.தே.கட்சி மீதோ சுதந்திரக் கட்சி மீதோ நாம் வைத்திருந்த நம்பிக்கையை இழந்துவிட்டோம்.

அவர்கள் தமது (12 ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பு

தேசிய இனப்பிரச்சினை தீர்வு முயற்சியில் ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து செயற்படுவதென - ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டது.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று இடம்பெற்ற இரண்டுமணிநேர (12 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம்

நாவற்குழி சந்திக்கு அண்மையாக நேற்றுக் காலை 6.30 மணியளவில் ஓட்டோவுடன் வான் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் மூவர் படுகாயமடைந்தனர்.


இந்தச் சம்பவத்தில் கல்லடி வீதி - நுணாவிலைச் சோந்த இராமலிங்கம் சதீஸ் (வயது 29) என்பவரே மரணமடைந்தவர் ஆவார். சுதாகரன் (வயது 24), (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் சூடு; பொலிஸார் படுகாயம்!

மட்டக்களப்பு

மட்டக்களப்பு நகருக்கு அண்மையிலுள்ள ஜயந்திபுரத்தில் நேற்று மாலை 5.30 மணியளவில் இனந்தெரியாதோர் நடத்திய துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமுற்ற பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார்.

ஜயந்திபுர பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் நிஹால் பத்திரன (வயது 42) என்ற பொலிஸாரே காயமடைந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இராணுவத்துடன் இணைந்து வழமையான ரோந்து(12 ஆம் பக்கம் பார்க்க)



## ஈழத் தமிழர் பிரச்சினைக்கு தனித் தமிழீழமே ஒரே தீர்வு!

### வைகோ தெரிவிப்பு

சென்னை

ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தனிநாடுதான் ஒரே தீர்வு என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலர் வைகோ தெரிவித்தார். சென்னையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ம.தி.மு.க. பொதுக் கூட்டத்தில் பேசும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது -

ஈழத் தமிழர் பிரச்சினைக்கு தனிநாடு என்பதுதான் தீர்வு. இதைக் கூறுவதால் ஏதோ ஈழத் தமிழர்களைப் பற்றி மட்டுமே வைகோ பேசுகிறார் என்றும், தமிழக மக்கள் மீது (12 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டவர்கள் மீது திருமலையில் தாக்குதல்!

திருகோணமலை

திருகோணமலையில் நேற்று மாலை சட்டவிரோத புத்தர் சிலையையும், அதற்குப் பாதுகாப்பு வழங்கிய படையினரையும் புகைப்படம் பிடித்த இரு வெளிநாட்டவர்கள் தாக்கப்பட்டனர். இவர்கள் தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வில் பங்கேற்றோரையும் கடந்த சனிக்கிழமை படம் பிடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பொலிஸார் குறித்த வெளிநாட்டவர்களைப் பாதுகாப்பாக அனுப்பிவைத்தனர்.

## 11 தமிழ் இளைஞர்கள் தங்காலையில் கைது!

கொழும்பு


தங்காலையில் உரிய ஆவணங்களின்றி நடமாடியதாக 11 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

தங்காலையிலிருக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச வீட்டிற்கருகிலுள்ள மதுபானசாலையில் இவர்கள் மது அருந்திக் கொண்டிருந்தபோதே கைதுசெய்யப்பட்டனர்.

தங்காலை வைத்தியசாலையில் கட்டட நிர்மாண வேலைகளுக்காக லிந்துலை மற்றும் மலையகத்தின் ஏனைய பிரதேசங்களில் இருந்து தாங்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பதவியிலிருந்து சந்திரிகாவை அகற்றும் சதித்திட்டத்தை அம்பலப்படுத்துவேன்!

### வெளிவிவகார அமைச்சர் அனுரா



கொழும்பு

ஜனாதிபதி பதவியிலிருந்து சந்திரிகாவை அகற்றும் சதித்திட்டத்தை விரைவில் நாடாளுமன்றத்தில் அம்பலப்படுத்துவேன் என்று வெளிவிவகார அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

கெடம்ப மாநகராட்சி சபை மைதானத்தில் நடைபெற்ற மஹிந்த ஆதரவு தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அனுரா, சந்திரிகா, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில் பேசிய அனுரா பண்டாரநாயக்க -

12 ஆண்டுகளுக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில் சதிச் செயலால் இந்த ஆண்டே ஜனாதிபதி பதவியிலிருந்து சந்திரிகா குமாரதுங்க ஓய்வு பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## பயிலுநர் அல்லாத பட்டதாரிகள் யாழ்.கல்வி வலயத்தை முற்றுகை!

யாழ்ப்பாணம்

நிரந்தர நியமனம் கிடைக்காத பயிலுநர் அல்லாத பட்டதாரிகள் நேற்று யாழ்.கல்வி வலயத்தின் பிரதான வாயிலை மூடி அடையாள மறியல் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவால் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் மேற்படி பட்டதாரிகள் தோற்றிய போதும் இதுவரை நியமனங்கள் எதுவும் வழங்கப்படவில்லை.

எனவே, தமது நியமனங்களை உடன் வழங்குமாறு கோரிக்கை விடுத்தே பயிலுநர் அல்லாத பட்டதாரிகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

# மிதிவெடி அகற்றப்பட்ட பகுதிகள் பிரதேச செயலர்களிடம் கையளிப்பு!

யாழ்ப்பாணம்—

செம்மணி, அச்சுவேலிப் பகுதிகளில் இராணுவத்தால் மிதிவெடி அகற்றப்பட்ட பிரதேசங்கள் நேற்று பிரதேச செயலர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

யாழ்.மாவட்டத்தில் யுத்த காலத்தில் இராணுவத்தால் மக்கள் குடியிருப்புக்களிலும், வயல் நிலங்களிலும் பரவலாக மிதிவெடிகள் விதைக்கப்பட்டன. இந்த மிதி வெடிகளை அரச சார்பற்ற நிறுவனங்களும், இராணுவத்தினரும் அகற்றி வருகின்றனர். செம்மணி, அச்சுவேலி போன்ற பல பிரதேசங்களில் இராணுவத்தால் விதைக்கப்பட்ட கண்ணி வெடிகளை இராணுவப் பொறியியலாளர் அகற்றி வருகின்றனர்.

நேற்று காலை 10 மணியளவில் செம்மணிப் பகுதியில் மிதிவெடி அகற்றப்பட்ட 290 சதுர அடிப் பிரதேசம் இராணுவத்தின் யாழ்.மாவட்ட மிதிவெடி அகற்றும் பிரிவின் பொறுப்பதிகாரி மேஜர். பிரதீப் கமகேயினால் நல்லூர் பிரதேச செயலரிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

இதேவேளை, அச்சுவேலிப் பகுதியில் மிதிவெடி அகற்றப்பட்ட 4150 சதுர அடி பிரதேசம் நேற்று காலை 11 மணியளவில் இராணுவத்தின் மிதிவெடி அகற்றும் பிரிவின் பொறுப்பதிகாரி மேஜர் பிரதீப் கமகேயினால் கோப்பாய் பிரதேச செயலரிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது.

# டைனமற் வைத்திருந்தவருக்கு 1000 ரூபா தண்டப்பணம் விதிப்பு

யாழ்ப்பாணம்—

குருநகர் ப்குதியில் டைனமற் வெடி மருந்தை வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதற்கு அமைய மூன்று வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனையும், ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது.

குருநகர் பகுதியில் மீன்பிடித் தொழிலுக்கு சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த சமயம் டைனமற் வெடி மருந்தை வைத்திருந்தார் என தெரிவித்து இர்ாணுவத்தால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் மேற்படி நபர் ஒப்படைக்கப்பட்டார்.

பொலிஸார் மேற்படி நபருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தனர். வழக்கை விசாரித்த நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா குற்றவாளி குற்றத்தை ஒப்புக் கொண்டதற்கு அமைய மூன்று வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனையும், ஆயிரம் ரூபா தண்டப் பணமும் விதித்துத் தீர்ப்பளிததார்.

# இரவு நேரம் வீதிகளில் நின்ற இளைஞர்கள் தாக்கப்பட்டனர்

வடமராட்சி—

வடமராட்சிப் பகுதியில் நேற்று இரவு வீதியோரத்தில் குழுக்களாக நின்ற இளைஞர்கள் மீது 30 பேர் கொண்ட குழு ஒன்று தடியடிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளது.

வடமராட்சியின் - வல்வெட்டித் துறைப் பகுதியில் 7.10 மணியளவில் 30 பேர் கொண்ட குழுவொன்று மோட்டார் சைக்கிளில் சென்று வீதியோரத்தில் நின்ற இளைஞர்கள் மீதே தடியடிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளது.

வல்வெட்டித்துறை, தொண்டமானாறு, பருத்தித்துறை, மந்திகை, துன்னாலை போன்ற இடங்களிலும் இந்தக் குழுவினர் வீதியில் நின்ற இளைஞர்களைத் தாக்கியதாகவும் தெரியவந்துள்ளது. (12)

## சின்னஞ்சிறு செய்திகள்

### கலந்துரையாடல்

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட பல வீதிகளில் மழைநீர் தேங்கி நிற்பதால் போக்குவரத்துக்கு பெரும் இடையூறு ஏற்பட்டுள்ளது. எனவே இதனை தீர்ப்பதற்கான கலந்துரையாடல் இன்று மாலை 5 மணிக்கு யாழ்.மாநகர சபை ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் மாநகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் வீதி அபிவிருத்தி அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபையினர் கலந்து கொள்ளவுள்ளனர்.

### நினைவுநாள் நிகழ்வு

யாழ்ப்பாணம்—

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சி.சுப்பிரமணியத்தின் நினைவு தினம் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் க.சிவாஜி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் மருதனார்மட கிறிஸ்தவ இறையியல் கல்லூரி முதல்வர் பேராயர் கலாநிதி அ.ஜெபநேசன் - 'ஆங்கிலேயர் காலத்தில் வாழ்ந்த ஓர் இலட்சியவாதியும், ஓர் யதார்த்தவாதியும்' என்ற தலைப்பில் நினைவுப் பேருரை ஆற்றவுள்ளார்.

### மலசலகூடங்கள் பாவனைக்கு

சேதமடைந்து பாவனையற்றிருந்த யாழ்.நவீனசந்தை மலசலகூடங்கள் யாவும் தற்போது திருத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும், அங்குள்ள அனைத்து மலசலகூடங்களும் பொது மக்களினதும், வர்த்தக நிலைய பணியாளர்களதும் பாவனைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார்.

### மரதன் ஓட்டப் போட்டி

மானிப்பாய்—

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரத்தையொட்டிய இறுதி நிகழ்வாக -சனசமூக நிலையங்களுக்கிடையில் ஆண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டி நடத்தவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் ஆண்கள் தத்தமது சனசமூகநிலையங்களுக்கூடாக எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம். மரதன் ஓட்டப் போட்டி 3 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறும் என செயலாளர் இ.இராசதுரை தெரிவித்தார். (48)

### பரீட்சை நேர மாற்றம்

யாழ்ப்பாணம்—

நாளை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவிருந்த புதிய சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான செயன்முறைப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தால் அன்றைய தினம் காலை 9 மணிக்கு நடைபெறுமென யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

### கிரிக்கெட் போட்டி

சண்டிலிப்பாய்—

வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் - மகாஜனாக் கல்லூரிக்கும் இடையிலான சினேகபூர்வ கிரிக்கெட் போட்டி இன்று பிற்பகல் 2.30 மணிக்கு மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் 14, 16, 18, 20 ஆகிய நான்கு வயதுப் பிரிவு அணிகளுக்குமிடையில் நடைபெறவுள்ளது. (72)

### மாணவர்களுக்கான சேமிப்புப் பிரிவு ஆரம்பம்

யாழ்ப்பாணம்—

இலங்கை வங்கி யாழ்ப்பாண பிரதான கிளையினர் யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களுக்கான சேமிப்புப் பிரிவு ஒன்றை இன்று யாழ். இந்துக் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் ஆரம்பிக்கவுள்ளனர்.

மாணவர்களுக்கான சேமிப்புப் பிரிவினை இலங்கை வங்கியின் யாழ். பிரதான கிளையின் உதவி பொதுமுகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் ஆரம்பித்து வைக்கவுள்ளார். இந்த நிகழ்வில் இலங்கை வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் என்.சிவராஜசிங்கம், பிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

### பருத்தித்துறையில் சத்திரசிகிச்சை நிபுணர்

வடமராட்சி—

இருதய நோய் சத்திர சிகிச்சை நிபுணர் டொக்டர். நற்குணம் யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து பகுதிநேர சிகிச்சைகளை மேற்கொள்வதற்காக இன்று வரவுள்ளதாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சாதாரண சத்திரசிகிச்சைகள் (கேணியா) போன்றவற்றையும், இருதய நோய் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சத்திரசிகிச்சைகளையும் மேற்கொள்ளவுள்ளதாகவும், ஒன்றுவிட்ட ஒரு செவ்வாய்க்கிழமைகளில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு இவர் வருகைதரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)


Swiss Labour Assistance

solidar
An INGO consortium including NPA, SAH and ASB

## கூறுவிலை கோரல்

செம்பியன் பற்று வடக்கிலேயோ அல்லது வத்திராயனிலேயோ (வடமராட்சி கிழக்கு) சுனாமியால் அழிக்கப்பட்ட வீடுகளை மீளப் புனரமைத்தல்.

ஏ.எஸ்.பி., என்.பி.ஏ மற்றும் எஸ்.ஏ.எச் ஆகிய சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியமாகிய சொலிடாரினால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செம்பியன் பற்று வடக்கிலும், வத்திராயனிலும் சேதமாக்கப்பட்ட வீடுகளை மீண்டும் புனரமைப்பதற்காக சீல்வைக்கப்பட்ட கூறுவிலைப் பத்திரங்களை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகிறீர்கள். பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் 20 தொடக்கம் 50 வீடுகள் தத்தமது தராதரத்துக்கும், தகுதிக்கும் ஏற்றவாறு கட்ட விரும்புவோரை இதில் பங்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். ஒப்பந்தக்காரர்கள் கூறுவிலைப் பத்திரங்களையும், சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் கீழ்காணும் முகவரியில் ரூபா 3000/= செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்படி கூறுவிலை விண்ணப்பப் படிவங்களும், ஆவணங்களும் 26.10.2005 திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளவேண்டும்.

Solidar/ ASB Construction Office,
160 Mile Post,
Farm Point,
A9 Road,
Paranthan.
தொலைபேசி - 021 228 5147

(C/4757)

மனோகரா யாழ்ப்பாணம்
பார்த்தீபன், லட்சுமிராய், வடிவேல் மற்றும் பலர் நடித்த
குண்டக்க மண்டக்க...
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30
வெகு விரைவில்..

DIGITAL dts SOUND
ஒலிநயத்துடன் இளைய தளபதி விஜய் வெடிக்கும்
சிவகாசி

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
ஆர்ஜா, சோனியா அகர்வால் மற்றும் பலர் நடித்த
ஒரு கல்லூரியின் கதை
தீபாவளி வெளியீடாக
தனுஷ், பிரியாமணி நடித்த
அது ஒரு கனாக்காலம்
காட்சிகள்;-10.30, 2.30,6.30, 9.30 (புதிய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்
கடைசி வாரமாக -சூர்யா, அஸின், நயன்தாரா, பிரகாஸ்ராஜ் நடித்த
கஜினி

அடுத்த வெளியீடு -
விக்கிரம், அஸின், வடிவேல் நடித்த
மஜா
காட்சிகள்:-10.30,2.30, 6.30, மட்டும் (ப.நேரம்)

நிறைஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார், நமீதா, வடிவேல் நடித்த
சாணக்கியா
காட்சிகள் 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)

புத்தம் புதிய DAIDO BRAND NEW MOPED

0112 341580, 0112 341581

சுன்னாகம் நாகம்ஸ்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு மூன்றாவது ஜனத்திரள் வாரமாக
ஜெயம் ரவி, ஸ்ரேயா, வடிவேல், கலாபவன்மணி, நடித்த
மழை

காட்சிகள்:-11.00,3.00,7.00, (பழையநேரம்)

வாசிப்பு மாதம்
"வாசியுங்கள் அகவிழி திறக்கும்"
வாசிப்போம் வாசித்ததை யோசிப்போம்
ஆசிரியர்களுக்கான மாத இதழ்
அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...
தொடர்புகளுக்கு:
No.03 Torrington Avenue,
Colombo - 7.
காசோலை எனின் அகவிழி என்ற பெயருக்கும், காசுக் கட்டளை எனில் கவலொக்ரவுனில் (Havelock) மாற்றக் கூடியதாக அனுப்பவும்.
T.P. 011- 2506272, E-Mail:ahavili@viluthu.org
(C/4683)


3 ஆவது பிறந்தநாள் வாழ்த்து
சிஜானுகா
2005.10.25

பழவத்தை, பொலிகண்டியைச் சேர்ந்த திரு.திருமதி சிவநாதன் ஜெயவதனா தம்பதிகளின் செல்வப்புதல்வி சிஜானுகா தனது மூன்றாவது பிறந்தநாளை (2005.10.25) செவ்வாய்க்கிழமை அன்று சுவிஸ்ஸர்லாந்தில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.
செல்வி சிஜானுகாவை பொலிகண்டி, பழவத்தையைச் சேர்ந்த அப்பப்பா, அப்பம்மா, ஜேந்தன் சித்தப்பா, மாமா, அத்தைமார், தாத்தா, அம்மம்மா, சித்திமார், சித்தப்பாமார், கனடாவில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, தங்கை சினேதா, மாமா, அத்தை, மச்சான், மச்சாள், சுவிஸில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, அண்ணா, அக்கா மற்றும் பிரான்சில் வசிக்கும் பிரகாஸ் சித்தப்பா அனைவரும் சீரும், சிறப்புமாய் வாழ வாழ்த்துகின்றனர்.

முகவரி:
புழவத்தை, பொலிகண்டி.
தகவல் :
கணபதி.இராசேந்திரம் (அப்பப்பா)
[2096]

# முஸ்லிம் காங்கிரஸின் 67 நிபந்தனைகளை ஏற்றதால் ரணிலுக்கு ஆதரவளிக்கிறோம்!

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



கொழும்பு —

முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்த 67 நிபந்தனைகளை ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டதால், ஜனாதிபதித் தேர்தலில் அவரை ஆதரிக்கிறோம் என்று அந்தக் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இதுகுறித்து ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த 6 மாதகாலமாக ரணில் விக்கிரமசிங்கவுடன் இது தொடர்பான பேச்சுகளை நடத்தினோம். முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுகிற வேட்பாளரைத்தான் ஆதரிப்பது என்று கட்சியின் மத்தியகுழு முடிவு செய்திருந்தது.

அமைதிப் பேச்சுகளில் முஸ்லிம் தனித்தரப்பு, சுனாமி பொதுக் கட்டமைப்பில் முஸ்லிம்களை உள்ளடக்குதல், தமிழர்களுடனான அதிகாரப் பகிர்வின் போது கிழக்கில் முஸ்லிம்களுக்கான தன்னாட்சி உள்ளிட்டவை ரணிலுக்கு முன்வைத்த நிபந்தனைகளில் முக்கியமானவை.

எம்மைப் பொறுத்தவரை ரணில் விக்கிரமசிங்கதான் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியும் என்று நம்புகிறோம். அதிகாரப்பகிர்வு மேற்கொள்ளப்படுவதுதான் முஸ்லிம்களின் உரிமையைப் பாதுகாக்கும் வழியாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மேலாதிக்கத்தின்கீழ் வாழ முஸ்லிம்கள் விரும்பவில்லை. விடுதலைப் புலிகளுடன் அதிகாரப்பகிர்வு மேற்கொள்ளும் நிலையில் நாங்களும் அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வோம். இதில் சமரசத்துக்கு இடமில்லை.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவுடனும் நாங்கள் பேச்சுகளை நடத்தினோம். அவர் எங்களது கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதாகக் கூறினார். இருந்தபோதும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு அதை நடைமுறைப்படுத்துவதற்கு அவரது கூட்டணிக்கட்சிகள் அனுமதிக்குமா என்பது குறித்த அச்சம் எங்களுக்கு இருந்தது.

அவரது தேர்தல் அறிக்கையில் முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாஷைகள் விளக்கப்படவில்லை. சர்வதேச சமூகத்தின் ஆதரவு பெற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதில் அனுபவம் உள்ளவர் என்பதால், அவரை ஆதரித்துள்ளோம் என்றார் ரவூப் ஹக்கீம்.

# சமையல் எரிவாயு விலை மேலும் உயருமாம்!

கொழும்பு —

அடுத்த வரவு - செலவுத் திட்டத்துக்கு முன்னர் சமையல் எரிவாயு கொள்கலன்களின் விலைகள் அதிகரிக்கப்படலாம் என தெரிவிக்கப்படுகின்றது. முன்னொருபோதும் இல்லாத வகையில் உலக சந்தையில் எரிவாயு விலை வேகமாக அதிகரித்துள்ளதாலேயே இந்த நிலை ஏற்பட்டிருப்பதாக எரிவாயு நிறுவனங்கள் தெரிவித்தன.

வீட்டுப்பாவனைக்கான கொள்கலன்களின் விலைகள் 150 ரூபாவால் அதிகரிக்கப்படலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த மாதம் எரிவாயு மெற்றிக் தொன் ஒன்றின் விலை 435 அமெரிக்க டொலராக இருந்தது.

எனினும், தற்பொழுது அதன் விலை 520 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

உலக சந்தையில் எரிவாயு விலைகள் மேலும் அதிகரிக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்காவைத் தாக்கிய சூறாவளிகள் காரணமாக பல எரிவாயு நிறுவனங்கள் பாதிக்கப்பட்டன. உலக சந்தையில் எரிவாயு விலை அதிகரிப்புக்கு இதுவும் ஒரு காரணம் என்று கூறப்படுகிறது.

# இலங்கையில் முதல்முறையாக கணினி வாக்காளர் அட்டைகள்!

கொழும்பு —

இலங்கையில் முதற் தடவையாக எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் கணனியில் வடிவமைக்கப்பட்ட வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளன.

கொழும்பு மேற்கு தேர்தல் தொகுதியில் இந்த முறை முதற் தடவையாகப் பரீட்சிக்கப்படவுள்ளது.

இதனடிப்படையில் கொழும்பு மேற்கு தேர்தல் தொகுதியில் - இரண்டு பக்கங்களைக் கொண்ட தொலைபேசிக் கட்டண பட்டியலை ஒத்த வாக்காளர் அட்டைகள் அஞ்சல் மூலம் வாக்காளர்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன.

இதுவரை வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்பட்ட வாக்காளர் அட்டைகளை அச்சிடுவதற்கு அதிக செலவு ஏற்படுவதையடுத்தே அவற்றை கடதாசி வடிவில் அச்சிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையர்ளர் தெரிவித்தார்.

இது சாத்தியமானால் தொடர்ந்துவரும் தேர்தல்களில் இந்த முறையை நடைமுறைப்படுத்த தேர்தல் செயலகம் தீர்மானித்துள்ளது.

இந்தப் புதிய முறைக்கு கட்சித் தலைவர்களின் அனுமதியும் கிடைத்துள்ளது.

இதேவேளை, எதிர்வரும் நவம்பர் மாதம் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு அரசாங்கம் மற்றும் தனியார் துறையினருக்கு விடுமுறை வழங்குமாறு தேர்தல் ஆணையாளர் கேட்டுள்ளார்.

# வரவு - செலவுத் திட்டத்தை பிற்போடுமாறு ஐ.தே.க கோரிக்கை



கொழும்பு —

அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டத்தை எதிர்வரும் நவம்பர் 22 ஆம் திகதி தாக்கல்செய்ய வேண்டாம் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை ஐக்கிய தேசியக் கட்சியின் துணைத் தலைவர் கரு ஜெயசூரிய கேட்டுள்ளார்.

புதிதாகத் தேர்வுசெய்யப்படும் ஜனாதிபதி தனது தேர்தல் அறிக்கையில் தெரிவித்திருக்கும் செயற்திட்டங்களை வரவு - செலவுத் திட்டத்தில் இணைப்பதற்கு ஏதுவாக இந்த வேண்டுகோளை தான் முன்வைப்பதாகவும் சந்திரிகாவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

ஜனாதிபதியாக தான் தேர்ந்தெடுக்கப்பட்டால், தனது தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளவற்றை இணைத்து புதிய வரவு - செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளதையும் கரு ஜெயசூரிய தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# சீரற்ற காலநிலை சில நாட்கள் நீடிக்கும்!

கொழும்பு —

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை மேலும் சில நாட்களுக்கு நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

தற்போது பெய்துவரும் கடும் மழை காரணமாக நாட்டின் தென்பகுதியில் தாழ்வான இடங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

களுத்துறையில் சில வீதிகளில் மூன்றரை அடி உயரத்துக்கு நீர் நிரம்பியிருப்பதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

மாலை அல்லது இரவு நேரங்களில் அடுத்த சில நாட்களுக்கு கடும் மழை பெய்ய வாய்ப்பிருப்பதால் தாழ்வான பிரதேசங்களில் வசிப்போர் அவதானமாக இருக்கும்படியும் கேட்கப்பட்டுள்ளது. (01)

# 20 நாடாளுமன்ற ஆசனங்களே ஹெல உறுமயவின் நோக்கம்!

## அத்துரலிய ரத்ன தேரர்



கொழும்பு —

நாடாளுமன்றத்தில் இருபது ஆசனங்களைக் கைப்பற்றுவதே தமது கட்சியின் எதிர்கால நோக்கம் என ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

கம்பஹாவில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேரும் நோக்கம் எமக்கு இல்லை. நாம் அரசியலுக்காக வெற்றிபெற முயலும் கட்சியல்ல. மக்களின் நலனைப் பாதுகாக்கவே முயற்சிக்கிறோம். இதனால் நாம் அனைவரும் முயற்சியுடன் செயற்படவேண்டும்.

அவ்வாறு செயற்படாவிடின் எமக்குப் பல பிரச்சினைகள் ஏற்படும். நாம் பிரதமருடனும் கூட்டுச் சேரமாட்டோம். நாடாளுமன்றத்தில் இருபது ஆசனங்களைக் கைப்பற்றுவதே எமது நோக்கம் எனவும் தெரிவித்தார்.

# மாவட்ட மட்ட தலைவர்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா அழைப்பு



கொழும்பு —

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மாவட்ட மட்டத் தலைவர்களுக்கான விசேட கூட்டம் ஒன்றுக்கு ஜனாதிபதி சந்திரிகா அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் இந்தச் சந்திப்பு இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளதாக தெரியவருகிறது.

இந்தக் கூட்டத்தில் இரண்டு பிரதிநிதிகளுடன் கலந்துகொள்ளுமாறு மாவட்டத் தலைவர்கள் கேட்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

# சுனாமி நிதி முறைகேடுகள்; திறைசேரி செயலாளர் பதில்!

கொழும்பு —

சுனாமி நிதி முறைகேடுகள் தொடர்பாக இலங்கை கணக்கு தணிக்கையாளர் தெரிவித்த குற்றச்சாட்டுகளுக்கு அரசாங்கம் பதிலளித்துள்ளது.

இது குறித்து கணக்கு தணிக்கையாளருக்கு திறைசேரி செயலாளர் பி.பி.ஜயசுந்தர அனுப்பியுள்ள கடிதத்தில் -

கடந்த ஜூலை 31 ஆம் திகதி வரையில் சுனாமி நிவாரண நிதியில் 13.5 வீதம்தான் பயன்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மொத்த சுனாமி நிவாரண நிதியாக பெறப்பட்டிருப்பது 1168.80 மில்லியன் ரூபா மட்டுமே. இது 6 துறைகளின் கீழ் பெறப்பட்டது.

நிவாரண நிதியாக வரவேண்டியது 3.4 பில்லியன் டொலர். தற்போது பயன்படுத்தப்பட்டிருக்கும் தொகையானது 927 மில்லியன் டொலராகும். இது 35 சதவீதமாகும்.

வீடமைப்புத் திட்டங்களைப் பொறுத்தவரையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒப்புக்கொண்டபடி பணிகளை முடிக்கவில்லை. ஓகஸ்ட் மாத அறிக்கைக்கும் தற்போதைய கணக்கு தணிக்கை அறிக்கைக்கும் முரண்பாடுகள் உள்ளன. 3200 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. வெறும் ஆயிரத்து 55 வீடுகள் மட்டுமே கட்டிமுடிக்கப்பட்டன என்பது தவறானது.

ஒவ்வொரு கணக்கு தணிக்கை அறிக்கையிலும் மக்களது நிதி சரியாகப் பயன்படுத்தப்படவில்லை என்று கூறப்படுவது வழமையாக உள்ளது. கணக்கு தணிக்கை முறையை மாற்றியமைப்பது குறித்து பரிசீலிக்க வேண்டுகிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கட்டுநாயக்க பாலியல் வல்லுறவு; விசாரணைக்கு இன்ரபோல் உதவி!

கொழும்பு —

கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்து பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள இன்ரபோலின் உதவியைப் பெறுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரபு நாடு ஒன்றுக்குச் செல்ல வந்திருந்த மேற்படி பெண் தனக்கு நேர்ந்த சம்பவத்தை விமானத்தில் பயணித்தவர்களிடமும் தெரிவித்திருப்பது பொலிஸ் விசாரணைகள் மூலம் தற்போது தெரியவந்துள்ளது. இவர்களிடம் விசாரணைகளை மேற்கொள்வதற்கே இன்ரபோலின் உதவி நாடப்படவுள்ளது.

இதேவேளை, கைதுசெய்யப்பட்ட ஐவரும் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதுடன், எதிர்வரும் 28 ஆம் திகதி இவர்களுக்கான அடையாள அணிவகுப்பும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 4 மாணவரின் சடலங்கள் மீட்பு

சீதுவ - தடுகம ஆற்றில் படகு கவிழ்ந்ததன் காரணமாக நீரில் இழுத்துச்செல்லப்பட்டதாகக் கூறப்படும் 4 மாணவர்களின் சடலங்களையும் கடற்படையினர் மீட்டுள்ளனர்.

தடுகம ஆற்றில் கடந்த சனிக்கிழமை படகில் சென்ற 8 மாணவர்களில் 4 பேர் ஆற்றுடன் இழுத்துச் செல்லப்பட்டனர்.

இவர்களைத் தேடும் பணியில் கடற்படை சுழியோடிகள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இந்தநிலையில் மூவரின் சடலங்கள் நேற்றுமுன்தினம் மாலை வரை மீட்கப்பட்டன. மற்றும் ஒருவரின் சடலம் நேற்றிரவு மீட்கப்பட்டது.

இதேவேளை, படகில் சென்ற ஏனைய நான்கு மாணவர்களிடமும் பொலிஸார் வாக்குமூலங்களைப் பெற்றுள்ளனர்.

# பரபரப்பான 1ஆவது ஒருநாள் ஆட்டத்தில் நியூஸிலாந்தை வென்றது தென்னாபிரிக்கா



புளும்பொன்டென் —

நியூஸிலாந்து அணியுடனான முதலாவது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி 2 விக்கெட்டுக்களால் வெற்றியைப் பெற்றது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் சென்றுள்ள நியூஸிலாந்து அணி 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்று வருகிறது.

முதல்போட்டி நேற்றுமுன்தினம் புளும்பொன்டென் நகரில் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

18 ஓட்டங்களை எடுப்பதற்குள் இரண்டு முக்கிய விக்கெட்டுக்களை இழந்து ஆட்டம் கண்டது. ஸ்கோர் 7ஆக இருந்தபோது அஸ்ரில் 1 ஓட்டத்துடனும், ஸ்கோர் 28 ஆக உயர்ந்தபோது வின்சென்ற் 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

அடுத்து பிளெமிங்குடன் மார்ஷல் இணைந்தார். இருவரும் இணைந்து ஸ்கோரை 70வரை உயர்த்தினர். இந்தநிலையில், தொடக்க வீரர் பிளெமிங், நெல்லின் பந்துவீச்சில் கிப்ஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

பிளெமிங் 48 பந்துகளில் 9 பவுண்டரிகளுடன் 45 ஓட்டங்களைப் பெற்றார். இவருக்குப் பின்னா மக்மிலன் களமிறங்கினார்.

ஆயினும் ஸ்கோர் 97ஆக உயர - மார்ஷல் கலிஸின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். இவர் 40 பந்துகளில் 16 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து மக்மிலனுடன் ஓரம் இணைந்தார். இருவரதும் அபார ஆட்டத்தால் ஸ்கோர் 172ஆக உயர்ந்தது. இந்தநிலையில் ஓரம் எதிர்பாராமல் ரன் அவுட்டானார்.

இவர் 60 பந்துகளில் 2 பவுண்டரிகளுடன் 35 ஓட்டங்களை எடுத்தார்.


அடுத்துவந்த மக்கலமும் நிதானமாக ஆடினார். ஸ்கோர் 200ஐத் தொட்டபோது - மக்மிலனின் விக்கெட்டை கலிஸ் கைப்பற்றினார். இவர் 75 பந்துகளில் 8 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 66 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து களமிறங்கிய விற்றோரி ஒரே ஒரு ஓட்டத்துடன் நெல்லின் பந்துவீச்சில் பிறின்ஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இதன்பின் அடம்ஸ் களமிறங்கினார். ஸ்கோர் 241 ஐ எட்டியபோது மக்கலம் - நெல் வீசிய பந்தை டிப்பென்னரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இவர் 32 பந்துகளில் 1 சிக்ஸருடன் 28 ஓட்டங்களை எடுத்தார்.

50 ஓவர்கள் நிறைவில் நியூஸிலாந்து அணி 8 விக்கெட் இழப்புக்கு 249 ஓட்டங்களை எடுத்தது. அடம்ஸ 22 பந்துகளில் 1 சிக்ஸர், 1 பவுண்டரியுடன் 30 ஓட்டங்களைப் பெற்றநிலையிலும், மில்ஸ் 1 ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் நெல் 3, கலிஸ் 2, பொலக் 1, என்ரினி 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

அடுத்து களமிறங்கிய தென்னாபிரிக்க அணியும் தொடக்கத்தில் ஆட்டம் கண்டது. ஸ்கோர் 29ஆக இருந்



தபோது டிப்பென்னர் 10 ஓட்டங்களுடனும், 34ஆக இருந்தபோது கலிஸ் ஓட்டமெதையும் பெறாமலும் ஆட்டமிழந்தனர். அடுத்து ஸ்கோர் 41ஆக இருந்தபோது சிமித் 19 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

எனினும் கிப்ஸ், பிறின்ஸ் ஜோடி சற்று நிதானமாக ஆடி ஸ்கோரை 85வரை உயர்த்தியது. இந்தநிலையில் பிறின்ஸ் அஸ்ரிலின் பந்துவீச்சில் போல்டானார். இவர் 45 பந்துகளில் 31 ஓட்டங்களை எடுத்தார்.

தொடர்ந்து ஸ்கோர் 117ஆக இருந்தபோது - கிப்ஸ் ஆட்டமிழந்தார். பொண்டின் பந்தில் ஆட்டமிழந்த இவர் 69 பந்துகளில் 25 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து பௌச்சர் - கெம்ப் ஜோடி அபாரமாக ஆடி அணியை வலுவான நிலைக்குக் கொண்டு சென்றது. ஸ்கோர் 182ஐ எட்டியபோது பௌச்சர் விற்றோரியின் பந்தில் போல்டானார்.

இவர் 50 பந்துகளில் 33 ஓட்டங்களை எடுத்தார். அடுத்து கெம்புடன் பொலக் இணைந்தார். இருவருமே அதிரடி ஆட்டத்தின் மூலம் அணியை வெற்றிப் பாதைக்குக் கொண்டு சென்றனர்.

ஸ்கோர் 247ஐ எட்டியபோது - பொலக் பட்டேலின் பந்துவீச்சில் அடம்ஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இவர் 29 பந்துகளில் 2 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 37 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்த பந்திலேயே கெம்ப், பட்டேலின் பந்தில் வின்சென்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இவர் 64 பந்



துகளில் 5 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 73 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.


அடுத்து போயே 3 ஓட்டங்களை எடுத்து வெற்றி இலக்கான 250 ஓட்டங்களுக்கு ஸ்கோரை உயர்த்தினார்.

இதன் மூலம் 2 விக்கெட்டுக்களால் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்றது.

பொண்ட் 2, பட்டேல் 2, மில்ஸ் 1, அடம்ஸ் 1, விற்றோரி 1, அஸ்ரில் 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக கெம்ப் தெரிவு செய்யப்பட்டார்.

## தென்னாபிரிக்க பயிற்சியாளராக அலன் டொனால்ட் நியமனம்!



கேப்டவுன் —

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக அலன் டொனால்ட் நியமிக்கப்பட்டிருக்கிறார்.


பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ள இவருடன் கிரிக்கெட் சபை இரண்டுவருட ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

தென்னாபிரிக்க கிரிக்கெட்டின் தராதரத்தை உயர்த்தும் இந்தப் பொறுப்பில் நியமிக்கப்பட்டுள்ள டொனால்ட், முன்னாள் வீரர்கள் கேஸ்டன் உள்ளிட்ட துறைசார் கிரிக்கெட் நிபுணர்களுடன் இணைந்து பணியாற்றுவாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நியமனம் தனக்கு வழங்கப்பட்டிருக்கும் மிகப்பெரிய கௌரவம் என டொனால்ட் மகிழ்ச்சி தெரிவித்தார்.

## விளையாட்டு

# இன்றைய நாக்பூர் மோதலில் களமிறங்குகிறார் டெண்டுல்கர்



நாக்பூர் —

இந்திய, இலங்கை கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான ஒருநாள் தொடர் இன்று தொடங்கவுள்ளது. இதில் ஆறுமாத ஓய்வுக்குப் பின்பு மீண்டும் களமிறங்குகிறார் சச்சின் டெண்டுல்கர்.

இந்தியா சென்றுள்ள இலங்கை அணி 7 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடவுள்ளது. முதல் மோதல் நாக்பூரில் இன்று நடைபெறும். இந்தத் தொடரில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், அது சச்சினின் வருகைதான். இடது முழங்கை காயம் காரணமாக (டெனிஸ் எல்போ) ஆறு மாதங்களாக ஓய்வில் இருந்தவர், தற்போது முழுமையாகக் குணமடைந்துள்ளார். மீண்டும் அணிக்குத் திரம்பியுள்ள இவர் சந்திக்கும் முதல் தொடர் இது. சச்சின் இல்லாத ஆறுமாத காலமும் இந்திய அணி சொல்லிக் கொள்ளும் அளவுக்கு பெரிய அளவில் எந்த வெற்றியும் பெறவில்லை. இதற்குப் பதிலாக தோல்விகளைத்தான் நிறைய சந்தித்துள்ளது.

சரியான தொடக்க ஜோடி இல்லாததால், மிகப்பெரிய ஸ்கோர் செய்ய முடியாமல் இந்திய அணி தடுமாறியது. இந்த குறை சச்சினின் வருகையால் முடிவுக்குவரும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. நீண்ட இடைவெளிக்குப் பின்பு களமிறங்கும் இவர் இன்று முதல் தனது அதிரடியை தொடக்குவாரென இந்திய ரசிகர்கள் காத்துள்ளனர்.

இந்திய அணியில் இம்முறை இளம் வீரர்களின் ஆதிக்கமே காணப்படுகிறது. கேரளாவைச் சேர்ந்த வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீசந்த் முதல் முறையாக சர்வதேச ஒருநாள் போட்டியில் வாய்ப்புப் பெற்றுள்ளார். இவரைத் தவிர, ருத்ர பிரதாப் சிங், ஜெய்பிரகாஷ் யாதவ், ரெய்னா இப்படி நிறைய புதுமுகங்களே காணப்படுகின்றன.

காயம் காரணமாக சௌரவ் கங்கூலி இடம்பெறாததால், கப்டன் பதவியைப் பெற்றுள்ள ராகுல் ராவிட் தனது திறமையை நிரூபிக்க அவருக்கு இதுவே சரியான வாய்ப்பு.

சுமார் எட்டு ஆண்டுகளுக்குப் பின்பு இந்தியா சென்றுள்ள இலங்கை அணியும் வலுவானதாகக் காணப்படுகிறது.

முரளிதரன், வாஸ் போன்ற நட்சத்திர பந்துவீச்சாளர்கள் இருப்பதால், இந்தத் தொடரில் கடும் போட்டி நிலவும் என்பது மட்டும் உறுதி.

# வடமராட்சி வலயமட்ட உதைபந்தாட்டப் போட்டி; நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் சம்பியன்!

வடமராட்சி —

வடமராட்சி வலயமட்ட பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

நேற்று மனோகரா மைதானத்தில் நடைபெற்ற 16 வயதுப் பிரிவு இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியை எதிர்த்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி மோதியது.

ஆட்டம் தொடங்கி 12ஆவது நிமிடத்தில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணிக்கு தண்டனை உதை ஒன்று கிடைத்தது. இதனை பயன்படுத்தி ஜீவிதன் முதல் கோலைப் போட்டார்.

அதன்பின்னர் இரு அணிகளும் மிகச் சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்தபோது 21ஆவது நிமிடத்தில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி வீரன் நிருசாந் அடுத்தகோலையும் போட்டார். இதனால் இடைவேளைக்கு முன்னர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடர்ந்தபோது 20ஆவது நிமிடத்தில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி வீரர் சரத் தட்டிக் கொடுத்த பந்தை அதே அணியைச் சேர்ந்த நிருசாந் கோலாக்கி தனது அணியை வலுவான நிலைக்கு இட்டுச் சென்றார்.

அதன்பின்னரும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணி பலமுறை முயற்சித்தபோதும், கோல் எதனையும் போடமுடியவில்லை. இதனால் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியை 3:0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து அபார வெற்றியைப் பெற்றது.

அடுத்த ஆட்டமாக 18 வயதுப் பிரிவில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மோதியது.

இதில் ஆட்டம் தொடங்கி முதல் 9ஆவது நிமிடத்தில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி வீரர் அனோஜன் பந்தைக் கொண்டு சென்றபோது, அவருக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் விதிக்கு முரணான விதத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி விளையாடியமைக்காக நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியினருக்கு 10ஆவது நிமிடத்தில் தண்டனை உதை வழங்கப்பட்டது.

இதனைப் பயன்படுத்தி அவ்வணியைச் சேர்ந்த உமேஷ் கோலாக்கினார். அதன்பின்னர் ஆட்டம் மிக விறுவிறுப்பை அடைந்தபோது, 23ஆவது நிமிடத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியால அணி வீரர் வைதீவன் தட்டிக் கொடுத்த பந்தை, அதேயணியைச் சேர்ந்த சதீஸ் கோலாக்கினார். இதனால் இடைவேளைக்கு முன்னர் 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடர்ந்தபோது இரு அணியும் மிக விறுவிறுப்பாக மோதின. இதனால் இரு அணிகளாலும் கோல் எதனையும் போடமுடியாதிருந்த வேளை ஆட்டம் முடிவதற்கு 10 நிமிடங்கள் இருந்தபோது பார்வையாளர்களின் குழப்பத்தினால் விளையாட்டை மேற்கொண்டு நடத்தமுடியாத நடுவர் விளையாட்டை இடை நிறுத்தினார்.

இது தொடர்பான முடிவினை வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.வல்லிபுரம் பாடசாலைக்கு அறிவிப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (12)

# வீடியோகோன் தொடர்



மும்பை —

இந்திய - இலங்கை அணிகள் மோதும் ஏழு ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் - 'வீடியோகோன் கிண்ணத்தொடர்' என அழைக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொடரின் ஒவ்வொரு போட்டிகளின்போதும் தெரிவு செய்யப்படும் ஆட்ட நாயகனுக்கு எல்.ஜி.டி. தொலைக்காட்சியும், தொடர் நாயகனுக்கு பிளாஸ்மா தொலைக்காட்சியும் வழங்கப்படுமென வீடியோகோன் நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்தத் தொடரின் 2ஆம், 5ஆம் ஆட்டங்கள் பகலிரவு ஆட்டமாகவும், ஏனைய ஆட்டங்கள் யாவும் பகல் ஆட்டமாகவும் நடைபெறும்.



கிழக்கு ஜேர்மனி ஹொலே நகரில் நடந்த டபிள்யூ.பி.ஓ. லைட்ஹெவி வெயிட் குத்துச் சண்டைப் போட்டியில், ஹங்கேரியின் சோல்ட் எர்டியின் (வலது) தாக்குதலுக்கு நிலை குலைகிறார் பிரான்சின் மெக்தி ஷகோன். இந்தப் போட்டியில் எர்டி வென்று சம்பியன் பட்டத்தைச் தட்டிச் சென்றார்.

மட்ரிட்டில் நடந்த ஏ.டி.பி மாஸ்டர்ஸ் ரெனிஸ் அரையிறுதியில் குரோஷிய வீரர் இவான் ஜுபிசிக் 6-3, 3-6, 6-3 என்ற செட்களில் ஆஜென்ரீனாவின் டேவிட் நல்பாண்டியனை வீழ்த்தினார். இதன் மூலம் ஜுபிசிக் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.



# சட்டத்தையும், ஒழுங்கையும் கடைப்பிடிக்கும் வகையிலான கற்பித்தலே மாணவருக்கு அவசியம்

## பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம்

யாழ்ப்பாணம் —

நாட்டில் சட்டமும், ஒழுங்கும் நிலை நாட்டப்படும் போது தான் - மக்கள் அமைதியான வாழ்க்கை வாழமுடியும். இன்று சட்டமும், ஒழுங்கும் சீர்குலைந்துள்ளது. அது மிகவும் கவலைக்குரியது. மாணவர்கள் மத்தியில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நிறுத்தக்கூடிய வகையில் கல்வியை போதிப்பதில் ஆசிரியர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். நல்லாசிரியர்கள் சமூகத்தால் போற்றப்பட்டுக் கௌரவிக்கப்படுவார்கள் என பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம் தெரிவித்தார்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை ஆசிரியர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் எஸ்.திருச்செல்வம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய மாவட்ட நீதிபதி அரியநாயகம் -

ஆசிரியத் தொழில் புனிதமானது. தெய்வீகத்தன்மை பொருந்தியது. எனவே, ஆசிரியர்கள் தூய்மையுடனும், பொறுப்புணர்வுடனும் செயற்படவேண்டும். மாணவர்களுக்கு சிறந்த கல்வி புகட்டப்பட வேண்டும். அப்போதுதான் அவர்களின் எதிர்காலம் சிறப்புறுவதுடன், நாடும் சுபீட்சம் பெறமுடியும்.

ஆசிரியர்கள் தமது சமூகப் பொறுப்பை உணர்ந்து கடமைகளை ஒழுங்காக மேற்கொள்ள வேண்டும். இன்று ஒருசில ஆசிரியர்களின் பொறுப்பற்ற நடத்தைகளால் ஆசிரிய சமூகமே தலைகுனியக்கூடிய நிலை ஏற்பட்டுவருவது கவலைக்குரியதாகும்.

ஆசிரியர்கள் சமூகத்துக்கு முன் உதாரணமாக நிகழ்ந்து தொழிலுக்குப் பெருமை தேடி, தமது வாழ்வையும் வளம்படுத்திக் கொள்ள வேண்டும். நல்லாசிரியர்கள் சமூகத்தில் தெய்வமாக மதிக்கப்படுவர்.

மாணவர்கள் மட்டுமல்ல, ஆசிரியர்களும் நவீன விஞ்ஞான தொழில்நுட்ப மாற்றங்களுக்கேற்ப அறிவு ஆற்றல்களை வளர்த்துக்கொள்ள வேண்டும். அவர்கள் படித்துக்கொண்டே இருக்க வேண்டும்.

பாடங்களை முன் ஆயத்தம் செய்து கொண்டே ஆசிரியர்கள், மாணவர்களுக்கு கல்வி கற்பிக்க வகுப்புகளுக்குச் செல்ல வேண்டும். அப்போதுதான் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியும். அன்பு, கருணை, புத்துணர்வு, அகமகிழ்வு, முகமலர்ச்சி, புன்முறுவல் ஆகியன ஆசிரியர்களின் அணிகலன்களாக இருக்க வேண்டும்.

மாணவர்களுக்கு ஒழுங்கு, கட்டுப்பாடுகளைப் போதிக்கும் ஆசிரியர்கள், தாமும் ஒழுங்கு கட்டுப்பாடுகளுடனேயே செயற்படவேண்டும். ஆசிரியர்களுக்கு கூடிய உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. அந்த உரிமைகளுக்கு ஏற்ப கடமைகளையும் சிறப்பாக மேற்கொள்ள வேண்டும்.

கடமைகளை உதாசீனம் செய்து, உரிமைகளை எதிர்பார்ப்பது சமூக துரோகமாகும். கல்வி புனிதமானது. பாடசாலைகள் ஆலயங்கள் போன்றன. தெய்வீகப் பணியான கல்விப்பணியை ஆற்றும் ஆசிரியர்கள் மாணவர்களால் விரும்பப்படுவர். சமூகம் அவர்களைப் போற்றி கௌரவிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (12)

## மண்வெட்டிகள் அன்பளிப்பு

சுதுமலை —

மாதகல் விவசாயிகள் சம்மேளனத்தால் அந்தப் பகுதி விவசாயிகளுக்கு மண்வெட்டிகள் வழங்கப்பட்டுள்ளதாக, விவசாய சம்மேளனத் தலைவர் வி.சிற்றம்பலம் தெரிவித்துள்ளார்.

மாதகல் பலநோக்கு கூட்டுறவுச்சங்க கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - கீரிமலை கமநலசேவை நிலைய பெரும்போக உத்தியோகத்தர், விவசாயிகளுடன், சம்மேளன, சங்க உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (91)

## மலசலகூடங்கள் அமைக்க நடவடிக்கை

சுதுமலை —

வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச செயலர் பிரிவிலுள்ள அராலிப் பகுதியில் - 20 மலசலகூடங்களை யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைத்துக் கொடுக்க சங்கானை பிரதேச செயலகர் சீ.ஏ.மோகன்ராஸ் நடவடிக்கை எடுத்துள்ளார்.

தலா 70 ஆயிரம் ரூபா செலவில் மலசல கூடங்களை அமைக்கவுள்ளதாகவும், வருமானம் குறைந்த மலசலகூடம் இல்லாத 20 பயனாளிகள் அராலி மேற்கு, அராலி மத்தி ஆகிய பகுதிகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (91)

## ஆயுர்வேத மருந்தகம் இயங்கும் நாட்கள்

பருத்தித்துறை —

பருத்தித்துறை அரசினர் ஆயுர்வேத மத்திய மருந்தகம் திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று நாட்களும் பருத்தித்துறை 2 ஆம் குறுக்குத் தெருவில் உள்ள நிலையத்திலும் - செவ்வாய், வியாழன், சனி ஆகிய மூன்று நாட்களும், தம்பசிட்டியில் அமைந்துள்ள நிலையத்திலும் இயங்கி வருகின்றன.

பருத்தித்துறை 2 ஆம் குறுக்குத் தெருவில் அண்மையில் திறக்கப்பட்ட இந்த மருந்தகம், ஒரு சில நாட்களில் திடீரென தம்பசிட்டிக்கு மாற்றப்பட்டது.

இந்த நடவடிக்கைக்கு பொது அமைப்புகள், பொதுமக்கள் காட்டிய எதிர்ப்பை அடுத்து மேற்படி புதிய நடை முறையின் கீழ் மருந்தகம் இயங்கி வருகிறது. (14)

# சங்கானை, சண்டிலிப்பாய் பகுதியில் வாய்ப்புற்றுநோய் பரிசோதனை!

சுதுமலை —

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட சங்கானை, சண்டிலிப்பாய் பகுதி பிரதேச செயலர் பிரிவுகளில் எதிர்வரும் 29, 30 ஆம் திகதிகளில் வாய்ப்புற்றுநோய் தொடர்பான பரிசோதனை இடம்பெறவுள்ளது.

50 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலருக்கும் வாய்ப்புற்றுநோய் அறிகுறிகள் உள்ளனவா எனக் கண்டறியும் பரிசோதனை, சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 29 ஆம் திகதி சனிக்கிழமையும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறவுள்ளது.

மேற்படி பிரிவுகளிலுள்ள அரசினர் வைத்தியசாலை, ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பரிசோதனை நிலையங்களிலும் நடைபெறவுள்ள பரிசோதனைக்கு 50 வயதுக்கு மேற்பட்டோர் தவறாது கலந்துகொள்ளுமாறும் கேட்டுள்ளனர்.

பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல சேவை அலுவலர்களுடன் மற்றும் சுகாதாரத் தொண்டர்களின் உதவியுடன் வாய்ப் புற்றுநோய் தொடர்பான பரிசோதனைக்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (91)

# மரக்காலை, தச்சுப்பட்டறைகளை பதிவுசெய்யுமாறு கோரிக்கை!

சுதுமலை —

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள சகல மரக்காலைகளையும் பதிவுசெய்யுமாறு, பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் மரக்காலை உரிமையாளர்களைக் கேட்டுள்ளார்.

மரக்காலை, தச்சுப்பட்டறைகள் ஆகியவற்றின் உரிமையாளர்களுக்கு அனுப்பிவைத்துள்ள குறிப்பில் பிரதேச செயலர் தெரிவித்துள்ளதாவது -

குறிப்பிட்ட கால எல்லைக்குள் தமது நிறுவனங்களைப் பதிவு செய்ய உரிமையாளர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. பதிவு செய்யாமல் இயங்கும் மேற்படி நிறுவனங்கள் சட்டவிரோதமாக இயங்கும் நிறுவனங்களாக கருதப்பட்டு, சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படுமெனவும், வியாபார பெயர் பதிவு கட்டளைச் சட்டத்தின் கீழ், பிரதேச செயலகத்தில் பதிவுசெய்த போதிலும், வனவள பரிபாலன திணைக்களத்தில் பதிவுசெய்யவேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

மரம் கொள்வனவு செய்தல், மரங்களை ஏற்றிச்செல்லல் போன்ற செயற்பாடுகளுக்கு பதிவுகள் கட்டாயம் தேவை எனவும், உரிய பதிவுகளை விரைவாக மேற்கொள்ளுமாறும் பிரதேச செயலர் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுள்ளார். (91)

# அதிபர் பதவி வெற்றிடத்துக்கு விண்ணப்பங்கள் கோரல்!

யாழ்ப்பாணம் —

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் அதிபர் வெற்றிடத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்.கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் அதிபர் வெற்றிடத்துக்கு அதிபர் தரம் I இல் உள்ள அதிபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக - யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் செல்வரத்தினம் தெரிவித்தார்.

இதற்கான முடிவுத் திகதியாக எதிர்வரும் 01.11.2005 அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், யாழ்.மத்திய கல்லூரி அதிபர் வெற்றிடத்துக்கு இந்தக் கல்லூரி தேசிய பாடசாலையாக உள்ளதால், அதிபர் நியமனத்தை கல்வி அமைச்சு தான் தீர்மானிக்க வேண்டும் எனவும், இந்தக் கல்லூரியின் தற்காலிக அதிபராக உப அதிபர் பத்மநாதன் கடமையாற்றுகிறார் எனவும் அவர் தெரிவித்தார்.

# கரவெட்டி பிரதேச செயலக சிறுவர்-முதியோர் தின விழா

சுதுமலை —

கரவெட்டி பிரதேச செயலக சிறுவர் - முதியோர் தின கௌரவிப்பு விழா நிகழ்வுகள் - எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கரவெட்டி பிரதேசசபை கேட்போர் கூடத்தில், பிரதேச செயலர் சி. சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்வுகளுடன் அன்பளிப்புக்கள் வழங்கி முதியோர்கள் கௌரவிக்கப்படும் நிகழ்வும், போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம் பிரதம விருந்தினராகவும், மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமி, யாழ். மாவட்ட பிரதி மாகாண சுகாதார பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.அம்பலவாணர், வடமராட்சி லயன்ஸ் கழகத் தலைவர் சி.சிவகுமாரன், சாவகச்சேரி பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளர் ஆ.இரகுநாதன், நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் செ.சேதுராசா ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர். (91)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை மூன்று



பெயர் : சி.சிஜானுகா

முகவரி : பொலிகண்டி.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ----------------------

முகவரி : ----------------------

பிறந்த ஆண்டு : ----------------------

கூப்பன்களும் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------------------

பெற்றோர் ஒப்பம்


# நெடுந்தீவில் சிறப்பாக நடைபெற்ற சிறுவர், முதியோர் தின நிகழ்வு

நெடுந்தீவு —

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான சிறுவர் - முதியோர் தினம் கடந்த வாரம் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ம.பற்றிக்டிறஞ்சன் தலைமையில் நெடுந்தீவு மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த விழாவின் போது சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினரால் வழங்கப்பட்ட சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள், பாடசாலைப்பைகள் என்பன - வறுமைக் கோட்டுக்குட்பட்ட சிறுவர்களுக்கு வழங்கப்பட்டதுடன், விளையாட்டு உபகரணங்கள் நெடுந்தீவில் உள்ள பாடசாலைகள், முன்பள்ளிகள் என்பவற்றுக்கும் வழங்கப்பட்டன.

இதேவேளை, நெடுந்தீவில் விசேட தேவைகள் உள்ள சிறார்கள் 40 பேருக்கு மாதாந்தம் 500 ரூபாவை வழங்கும் வகையிலான செயற்பாட்டின் ஆரம்பக் கொடுப்பனவும் அன்றைய தினம் வழங்கப்பட்டதுடன், முதியோர்களும் கௌரவிக்கப்பட்டு - அவர்களுக்குப் போர்வைகள், நுளம்பு வலைகள் என்பனவும் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த விழாவுக்கான சகல ஏற்பாடுகளையும் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், சமூகசேவை அலுவலர்கள் ஆகியோர் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (113)

# இளைஞர்கள் அட்டகாசம்

நெல்லியடி —

நெல்லியடி - கொடிகாமம் வீதியில் அமைந்துள்ள வீடுகளில் இளநீர் பறித்துத் தருவதாகக் கூறி வீடுகளுக்குள் நுழையும் இளைஞர்கள், அட்டகாசம் புரிவதாக அந்தப் பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

பெண்கள் தனியாக இருக்கும் வீடுகளிலும் இந்த இளைஞர்கள் அட்டகாசம் புரிவதோடு, வீட்டுக்கு வெளிப்பக்கத்தில் காணப்படும் மின்குமிழ்களைத் திருடிச்செல்வதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளனர். (14)




# மாரடைப்புக்கு முதலுதவி



மாரடைப்பு ஏற்பட்டவுடன் மருந்து கொடுத்தால் குணமடைந்துவிடும் என்று நினைக்கின்றார்கள். சிலர் மாரடைப்பு வந்தவுடன் இதயத்துடிப்பு முற்றாக நிறுத்தப்பட்டுவிட்டது என நினைக்கின்றார்கள். இதயமானது தன்னுடைய செயற்பாட்டை தற்காலிகமாக நிறுத்துவதாலேயே மாரடைப்பு ஏற்படுகிறது. இப்படி ஏற்படும்போது, 2 அல்லது 3 நிமிடங்களில் இதயத்தை இயங்கவைக்காதுவிட்டால், ஒருவர் இறக்கவேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. உலகளாவிய ரீதியில் மாரடைப்புக்கு உடனடிச் சிகிச்சை முதலுதவிதான் என்று கருதப்படுகின்றது. செயற்கைச் சுவாசமும் அத்துடன் இதயத்துக்கு மசாஜ் செய்தலும் உடனடி முதலுதவியாகக் கருதப்படுகிறது. தற்போது வைத்தியர்களே மாரடைப்புக்குரிய அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சை முறையாக முதலுதவிச் சிகிச்சையைச் சிபாரிசு செய்துகொண்டுவருகின்றார்கள்.

# வெறிநாய்க்கடிக்கு புதிய மருந்து

அண்மைக்காலம்வரையில் வெறிநாய்க்கடிக்கான தடுப்பூசிகள் வெளிநாட்டிலிருந்துதான் இறக்குமதி செய்யப்பட்டன. ஆனால் அண்டைநாடாகிய இந்தியாவிலிருந்து தற்போது வெறிநாய்க்கடிக்குரிய மருந்து வருகிறது. இந்தியாவில் முதன்முறையாக செரம் இன்ஸ்டிடியூட் வெறிநாய்க்கடி தடுப்பூசியை அறிமுகப்படுத்தியுள்ளது. "ராபிலாக்ஸ்" என்றழைக்கப்படுகின்ற இந்தப் புதிய வெறிநாய்க்கடிக்கான தடுப்பூசி அலர்ஜியை ஏற்படுத்தாது. மற்ற வெறிநாய்க்கடி மருந்துகளில் ஒவ்வாமையை உருவாக்குகின்ற நியோமைசின், ஸ்ட்ரெப்டோமைசின், பாலிமிக்ஸின், காளமைசின் போன்ற பொருட்கள் இல்லாமையால் உடலில் தேவையில்லாத சிக்கல்கள் ஏற்படாது என வைத்திய நிபுணர்கள் அடித்துக்கூறுகிறார்கள்.



# அமேசன் காட்டிலுள்ள அதிசய விலங்குகள்



தென் அமெரிக்காவில் உள்ள அமேசன் நதி மனித நடமாட்டம் குறைந்த பகுதியாதலால், அங்கு வாழும் உயிரினங்கள் எந்த மனித தொந்தரவுமின்றி அமைதியாக வாழுகின்றன. இங்கே காணப்படும் விலங்குகளில் மிகவும் பிரசித்திபெற்ற விலங்குகளாக பிரானா மீன்கள், அனகொண்டா பாம்புகள் இராட்சத சிலந்திகள், இராட்சத வண்டுகள், இராட்சத ஓணான்கள், இராட்சத எறும்புண்ணிகள் ஆகியன காணப்படுகின்றன. இங்கு காணப்படும் இராட்சத ஓணான்கள் பார்ப்பதற்குத்தான் பயங்கரமானவை. உண்மையில் அவை மிகவும் சாதுவானவை. ஏறக்குறைய 6 முதல் 8 அடி நீளம்வரையான இராட்சத ஓணான்கள் காணப்படுகின்றன. இதைவிட இராட்சத எறும்புண்ணிகள் ஏறக்குறைய 7 அடி நீளமுடையவை. இவற்றின் உடல் மட்டும் 4 அடி நீளமும், வால்பகுதி 3 அடி நீளமும் கொண்டது எனக் கூறப்படுகிறது.

# மருந்தாகும் மது




மது அருந்துவதால் பல தீமைகள் உடலுக்கு ஏற்படுகிறது என்பது யாவரும் அறிந்த விடயம். ஆனாலும் மருத்துவ ஆய்வுகளின்படி சில நன்மைகள் ஏற்படுகின்றன. உடலில் ஏற்படும் காயங்களிலிருந்து இரத்தம் வெளியேறுவதை குருதிச்சிறுதட்டுகள் தடுக்கின்றன. இந்தச் சிறுதட்டுகள் கண்டபடி குருதியை உறைய வைத்தால், பக்கவாதம் மற்றும் மாரடைப்பு ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

மது அருந்தும்போது குருதிச் சிறுதட்டுகளின் விறைப்புத் தன்மை குறைகிறது. இதனால் இரத்தம் மெலிதாகிறது.

கொழுப்பு சம்பந்தமான இரத்த அடைப்புகள் இருப்பின் மதுபானம் அருந்தினால் இரத்த அடர்த்தியைக் குறைத்து இரத்த ஓட்டம் சீராகும். இதனால் மாரடைப்பு அபாயம் ஏற்படாது. இதேவேளை - இதனைச் சாதகமாகக் கருதும் குடிமக்களுக்கு தொடர்ச்சியாக இரத்தத்தில் அடர்த்தி குறைந்து வெகு சீக்கிரம் பக்கவாதம் வர வாய்ப்புண்டு எனக் கூறப்படுகிறது.


# பற்பசையிலுள்ள புளோரைட்டு



இப்போதெல்லாம் நிறைய பற்பசைகளில் புளோரைட்டு (Floride) உள்ள பற்பசை என விளம்பரம் செய்கிறார்கள். உண்மையில் புளோரைட்டு என்றால் என்ன? புளோரின் 'என்ற மூலகத்திலிருந்து கிடைப்பதுதான் புளோரைட்டு. இயற்கைப் பதார்த்தமாகிய இது பாறைகள், நிலங்கள் ஆகியவற்றில் கிடைக்கின்றது. பாறையை நீர் கரைக்கும்போது, புளோரைட்டு கிடைக்கின்றது. நமது உமிழ்நீரிலும் புளோரைட்டுக் கிடைக்கின்றது. புளோரைட்டுகள் இரண்டுவகைப்படும். சிஸ்டமிக் புளோரைட் மற்றும் டாபிக்கல் புளோரைட் ஆகியனவே அவையாகும். டாபிக்கல் புளோரைட்டு- வாயிலுள்ள பற்களை ஏற்கனவே உமிழ் நீரில் இருந்துகொண்டு பலப்படுத்துகிறது. பற்சிதைவு, பற்கறைகள் ஆகியவற்றை இது நிச்சயமாகத் தடுக்கும். உப்பில் அயடின் கலப்பதைப்போல உலகில் சுமார் 30 நாடுகளில் உப்பில் புளோரைட்டு சேர்க்கின்றார்கள். அவற்றுள் சுவிஸ், கொலம்பியா, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகள் முக்கியமானவை.

# உடலின் சமநிலையைக் குழப்பும் உணவு







சிலர் குறைவாகச் சாப்பிடுவதற்கும், அதிகமாகச் சாப்பிடுவதற்கும் நமது மன நிலையே காரணம் என்று வைத்திய நிபுணர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கோபம், தனிமை, மன இறுக்கம் போன்ற பல பிரச்சினைகளால்தான் அதிகமாகச் சாப்பிடத் தோன்றுகிறது என உளவியல் ஆய்வுகள் கூறுகின்றன. இவைகளைக் குறைத்துக்கொண்டு கொஞ்சத்தூரம் நடப்பது, தண்ணீர் குடிப்பது போன்ற பழக்கங்களை மேற்கொள்ளுவது நல்லது என, வட கரோலினா பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தெரிவிக்கப்படுகிறது. மூளையில் காணப்படுகின்ற செரோடானின் என்ற இரசாயனப் பொருள் நரம்புகளில் ஏற்படுகின்ற உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துகிறது. அதிகமாகச் சாப்பிடும்பொழுது செரடோனின் அளவு அதிகரிக்கிறது. இதனாலேயே டென்சன் அதிகரித்து உடலின் சமநிலை குழம்புகிறது.

# பறவைக்காய்ச்சலை எதிர்க்க தயாராகிறது ஐரோப்பா

துருக்கியில் பறவைக்காய்ச்சல் நோய் வைரஸான H5N1 அடையாளம் காணப்பட்டதையடுத்து, வைரஸ் எதிர்ப்பு மருந்து வகைகளைத் தயாராகச் சேமித்து வைக்கும்படி தனது உறுப்பு நாடுகளை ஐரோப்பிய ஒன்றியம் கேட்டுள்ளது. ஏற்கனவே பறவைக் காய்ச்சல் வைரஸ் ரூமேனியாவில் வேகமாக பரவத் தொடங்கியுள்ளது. 2003 இல் தென்கிழக்காசியாவில் தோன்றிய இந்த நோய், இதுவரை 60 பேரின் உயிரைக்குடித்துள்ளது.




எனினும், மனிதனில் இருந்து மனிதனுக்கு இந்த வைரஸ் பரவுவது மிகவும் மந்தம் எனவும், பறவைகள் மூலமே வேகமாகப் பரவுகிறது. எனவும் வைத்தியர்கள் கூறுகின்றனர். வலசை செல்லும் (Migrating Birds) பறவைகளே இவற்றை காவிச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பறவைக்காய்ச்சல் நோய் அச்சம் காரணமாக ரூமேனியாவில் கூட்டம் கூட்டமாக பண்ணைப் பறவைககள், அவற்றை வளர்ப்பவர்களால் கொல்லப்படுகின்றன.

# புராதன நூடில்ஸ் சீனாவில் மீட்பு

உலகின் மிகப்புராதன நூடில்ஸ் உணவு சீனாவில் மீட்கப்பட்டுள்ளது. மிகப் பாரிய வெள்ளப் பெருக்கினால் பல ஆண்டுகளுக்கு முன்பு அழிந்த ஓர் நகரத்தில் மேற்கொள்ளப்பட அகழ்வாராய்ச்சியின் போது, இது மஞ்சள் நிறமான 50 செ.மீ.நீள நூடில்ஸ் பானை ஒன்றினுள் இருந்தபடி மீட்கப்பட்டுள்ளது ரேடியோக்கதிர் வீச்சு ஆய்வின் மூலம் இது 4000 ஆண்டுகள்



பழமையானது என கண்டறியப்பட்டுள்ளது. இந்த நூடில்ஸ் தற்போதையது போன்று கோதுமை மாவிலானது அல்ல என்றும், Millet எனப்படும் புல்லினால் செய்யப்பட்டது என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். நூடில்ஸின் பிறப்பிடம் சீனாவா? அரேபியாவா? இத்தாலியா என்ற சந்தேகம் இதன் மூலம் தீர்க்கப்பட்டுள்ளது எனத்தெரிவிக்கப்படுகிறது. தென் சீனாவில் மஞ்சள் ஆறு அருகாக இருந்த லஞ்சியா என்ற இடத்திலேயே இது கண்டெடுக்கப்பட்டுள்ளது.

# பறவை டைனசோர் சீனாவில் மீட்பு

நீண்ட அலகு, செட்டை போன்ற கால்கள் கொண்ட சேவலின் அளவுள்ள டைனசோர் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதையடுத்து, பறவை டைனசோர் குறித்து ஏற்கனவே இருந்த எண்ணக் கருவை மாற்றவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 90 மில்லியன் வயதுடைய இந்த சிறகுகளுடன் கூடிய பறவை டைனசோர் - சீனாவில் மீட்கப்பட்டுள்ளது. இது ஜுராசிக்கு யுகத்திற்குரியதாக இருக்கலாம் என புதைபொருளியலாளர்கள் நம்புகின்றனர்.



புதிதாக மீட்கப்பட்ட இந்த டைனசோருக்கு Buitreraptor எனப் பெயரிட்டுள்ளனர்.

இது உலகம் ஒரே தட்டாக இருந்த போது, அனைத்துப் பகுதிகளிலும் நடமாடியுள்ளது.

பின்னர் கண்டங்கள் பிரிந்த போது தென் அமெரிக்கா மற்றும் சீனாவில் இவை தங்கி விட்டதாகக் கூறப்படுகிறது.

# அணுவெடிப்பு கண்டறி கருவிகள் சுனாமியையும் அடையாளம் காணும்

அணுகுண்டு பரிசோதனைகள் நடத்தப்படுகிறதா என்பதை கண்டறிய நிர்மாணிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு நிலையங்களால்கூட, சுனாமியின் தோற்றத்தையும் அதன் பாதையையும் கண்டறிய முடியும் என கலிபோர்னிய விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

THE TSUNAMI SPECTROGRAM




SOURCE : Hanson & Bowman American Geophysical Union



கடந்த டிசம்பர் சுனாமியின் ஒலியலைகளை பரிசோதித்தபின்பே அவர்கள் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளனர். சுனாமி ஏற்படுத்தும் ஒருவிததனித்துவமான ஒலி அணுவெடி சோதனை கருவிகளால் கண்டறியப்படக் கூடியவை. எனவே இத்தகைய அணுவெடிப்பு அவதானிப்பு நிலையங்கள்கூட, சுனாமி முன்னெச்சரிக்கை நிலையங்களாகச் செயற்படலாம் என அவர்கள் கூறுகின்றனர்.

# பங்கசு நோயால் பிரிட்டிஷ் தவளை அழிவு


பிரிட்டனில் காணப்படும் இரண்டு முக்கிய பங்கசு நோய்க்கிருமிகளால் ,அங்கு சாதாரண தவளைகள் அழிந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. உயிரின காப்புக்கழகம் ஒன்று இவ்வாறு பாதிக்கப்பட்ட தவளைகளை இனங்கண்டு கணக்கிடுமாறு பிரிட்டிஷ் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. Chytridiomycosis மற்றும் ranavirus ஆகிய நோய்க்கிருமிகளே பிரிட்டிஷ் தவளைகளை அழிக்கத் தொடங்கியுள்ளன. Froglife என்ற நிறுவனம் - மக்கள் தாம் காணும் தவளைகள் குறித்த விபரங்களைப் பதிவு செய்ய வினாக்கொத்தை விநியோகித்து வருகிறது.



இந்தப் பங்கசு நோய் தாக்கிய தவளையின் கால்கள் செந்நிறமாகவும், மெல்லியதாகவும் மாறுவதுடன் சில சமயம் கால்கள் கழன்று விழுந்து விடுவதும் உண்டு எனத் தெரிவிக்கப்படுகிறது.

# நிலவுக்கு சீனர்களும்

சீனாவின் மனிதனை விண்ணுக்கு அனுப்பும் இரண்டாவது திட்டமும் வெற்றியடைந்ததையடுத்து, 2007 இல் நிலவுக்கு மனிதனை அனுப்பும் திட்டத்தை செயற்படுத்த ஆரம்பித்துள்ளது. சீனாவின் Shenzhou VI என்ற விண்கலம் இரு சீனர்களுடன் வெற்றிகரமாக விண்ணில் பறந்து தரையிறங்கியுள்ளது. இதையடுத்து விண்ணில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டும் சீனாவின் கனவு நனவாகியுள்ளது. இதேசமயம் சீனா மனிதனுடன் நிலவுக்கு விண்கலத்தை அனுப்ப திட்டமிட்டு வருகையில், ஆளில்லா விண்கலத்தை நிலவுக்கு அனுப்ப இந்தியாவும் முண்டியடிக்கத் தொடங்கியுள்ளது. இப்போட்டியில் தற்போது ஜப்பானும் இறங்கியுள்ளது. இந்தியா தனது விண்வெளித் திட்டத்துக்கு ஏனைய நாடுகளின் நிபுணத்துவத்தைப் பெற ஒப்பந்தங்கள் செய்கையில், ஜப்பான் தனது சிறப்புமிக்க தொழில்நுட்ப வளத்தைக் கொண்டு போட்டியில் முந்திவருகிறது. இதேசமயம் சீனா அனைத்தையும் தனது மூலவளம் கொண்டே சாதிக்க முனைகிறது.



# பிறப்பு, இறப்பு பதிவு நடமாடும் சேவையில் 1500 இற்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்பு!

கிளிநொச்சி

வன்னியில் நடத்தப்பட்ட பிறப்பு, இறப்பு பதிவு நடமாடும் சேவையில் 1500 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டுள்ளனர் என வடக்கு - கிழக்கு மாகாண உதவிப் பதிவாளர்நாயகம் என்.சதாசிவ ஐயர் தெரிவித்தார்.

பிறப்பு, இறப்புச் சான்றிதழ்களைத் தொலைத்தவர்கள் மற்றும் இவற்றைப் பெறுபவர்களின் நன்மை கருதி- பளை மற்றும் கண்டாவளை ஆகிய இரு இடங்களில் வடக்கு - கிழக்கு மாகாண உதவிப் பதிவாளர்நாயக திணைக்களத்தால் இந்த நடமாடும் சேவை நடத்தப்பட்டது.

இதில் பளையில் 600 பேரும், கண்டாவளையில் 1200 பேரும் கலந்துகொண்டனர். நடமாடும் சேவையில் கலந்துகொண்டோரில் பெருமளவானோர் உரிய ஆவணங்கள் இல்லாமலும், பிறப்பு பதிவு தொடர்பில் உரியவர்கள் சமூகமளிக்காததாலும் பலர் தமது பதிவு நடவடிக்கைகளைத் தவறவிட்டுள்ளனர் என உதவி பதிவாளர்நாயகம் தெரிவித்தார்.

இந்த நடமாடும் சேவைகளின் போது உரியவர்கள் சமூகமளிப்பதோடு, உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும் எனவும் உதவிப் பதிவாளர்நாயகம் தெரிவித்தார். அடுத்தகட்டமாக மீண்டும் கண்டாவளையிலும் மற்றும் பூநகரியிலும் நடமாடும் சேவை நடத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இதயநோயினால் பாதிக்கப்பட்ட குழந்தையை காப்பாற்ற உதவுங்கள்

கிளிநொச்சி

2 ஆம் குறுக்குத்தெரு, பாரதிபுரம் கிழக்கு, கிளிநொச்சி என்னும் முகவரியிலுள்ள அருந்தவராசா கோபிகா (41 நாள்) என்ற குழந்தை இருதயநோயால் பாதிக்கப்பட்டுள்ளது.

இவரைக் காப்பாற்றுவதற்கு இருதய சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்குப் பெருமளவு நிதி தேவைப்படுகின்றது. இவ்வளவு பெரிய தொகை செலுத்தி சிகிச்சை பெறும் நிலையில், இவரது குடும்ப பொருளாதார நிலை இல்லையென்பதால் கருணை உள்ளம் படைத்தவர்களிடமிருந்து குழந்தையின் பெற்றோர் உதவி கோருகின்றனர். உதவி செய்யவிரும்புவோர் தமது நிதியை செ.அருந்தவராசா இலங்கை வங்கி, கிளிநொச்சி கிளையில் 30017 என்ற கணக்கு இலக்கத்துக்கு அனுப்பி உதவுமாறு பெற்றோர் வேண்டுகின்றனர்.

## விதைநெல் உரம் வழங்கல்

பூநகரி

பூநகரிப் பிரதேசத்தில் வலம்புரி இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த மக்களின் நன்மைகருதி, விவசாயக்கடன் திட்டத்தின் கீழ் விதை நெல், உரம என்பன வழங்கப்படவுள்ளன.

## கண்பரிசோதனையும் கண்ணாடிவழங்கலும்

வவுனியா

நெடுங்கேணி- நயினாமடு தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவை நிலையத்தில் இன்று வெளிநாட்டிலிருந்து வருகை தந்த கண் வைத்திய நிபுணர்களினால், கண் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, கண்ணாடிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

எனவே, அன்றையதினம் கண் பரிசோதனைகளை மேற்கொள்ளவேண்டியவர்கள் சமூகமளித்து, பயன்பெறுமாறு தியாகதீபம் திலீபன் மருத்துவப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

'வேரில் விழுந்த மழை'

## இறுவெட்டு ஒலிப்பேழை வெளியீட்டு விழா

கிளிநொச்சி

தியாக தீபம் திலீபனின் உணர்வுகளைத் தாங்கியவாறு கரவை இரா செங்கதிரின் இசையில் உருவான பாடல் தொகுப்பான வேரில் விழுந்த மழை இறுவெட்டு, ஒலிப்பேழை வெளியீட்டுவிழா- இன்று மாலை 3 மணியளவில் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது.



தமிழீழ கலை பண்பாட்டு கழகத்தின் விடியல் இசைக் குழுவினரின் தயாரிப்பில் இந்த வெளியீட்டுவிழா நடைபெறவுள்ளது.

# சிறுவர் நலன்களுக்கான நடவடிக்கை முன்னெடுப்பு

கிளிநொச்சி

வன்னிப் பிரதேசத்தில் சிறுவர் நலன்களுக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ள கிளிநொச்சி உட்பட சகல பகுதிகளிலும் கிராமிய மட்டங்களில் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை வன்னியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிறுவர்களின் மனநிலை பாதிப்படையாத வகையில் பல தரப்பட்ட பயிற்சிகள் உள்ளூர் சர்வதேச அரசு சாரா நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சிறுவர்களுக்கான கல்வி, விளையாட்டு உபகரணங்களையும் இவை வழங்கி வருகின்றன. வன்னியில் சிறுவர் நல சட்டங்களும் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவோர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

பாடசாலை செல்லமுடியாது பாதிப்படைந்த சிறுவர்களின் நலனில் விழிப்புணர்வை ஏற்படுத்தி பாடசாலை செல்லவைக்கும் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இந்தத் திட்டங்களை ஒருங்கிணைத்து தனது சகோதர கிளை உப நிறுவனங்களின் உதவியுடன் முன்னெடுத்து வருவதும் குறிப்பிடத்தக்கது.



கிளிநொச்சி - கோவிந்தன் கடைச்சந்தியில் அமைந்துள்ள சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் மாவீரர் நினைவாலயத்தில் நடைபெற்ற லெப்டினன்ட் கேணல் சேகரின் ஐந்தாம் ஆண்டு நினைவு கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் முன்னாள் சிறப்புத்தளபதியும், வடபோர்முனைக் கட்டளைத்தளபதிகளில் ஒருவரான விரமணி ஏற்றிவைப்பதையும், இந்த நிகழ்வின் நினைவுரையை சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் தளபதிகளில் ஒருவரான அமுதாப் நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

## காலச் சுவட்டில்...

### இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

**ஒக்ரோபர்-25**

1825 : தமிழ் நாவல்களுக்கு முன்னோடியாகக் கருதப்படும் பத்மாவதி சரித்திரம் எழுதிய அ.மாதவையா சென்னைப் பல்கலைக்கழக மண்டபத்தில் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கும்போது உயிரிழந்தார்.

1881 : 20 ஆம் நூற்றாண்டின் தன்னிகரில்லாத ஓவிய மேதையாகத் திகழ்ந்தவரும், சமாதானத்தின் குறியீடாக வெண்புறாவை வரைந்து தந்தவருமான பப்லோ பிக்காஸோ பிறந்தார். இவர் வரைந்த ஒரு ஓவியம் 1901 ஆம் ஆண்டில் நியூயோர்க்கில் 6.3 லட்சம் டொலருக்கு விற்பனையாகியது. நவீன ஓவிய மரபின் பிதாமகனாக இவர் கருதப்படுகிறார்.

1917 : நியூயோர்க் மாநிலத்தில் நடந்த பெண்கள் மாநாட்டில் வைத்து அமெரிக்க ஜனாதிபதி உட்ரோ வில்சன் பெண்களுக்கு வாக்குரிமையளிக்க ஒப்புக்கொண்டார்.

1931 : பிரான்ஸ் பிரதமர் பியாரிலேவலும், அமெரிக்க ஜனாதிபதி ஹூவரும் வொஷிங்டனில் சந்தித்துக் கலந்துரையாடியதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் தங்கமாற்று வீதத்தைக் கடைப்பிடிக்கப்போவதாக அறிவித்தனர்.

1935 : 1934 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 16 ஆம் திகதி தனது நெடும் பயணத்தை ஆரம்பித்த மாஸேதுங்கின் செஞ்சேனைப் படையினர் 7000 பேர் 9700 கி.மீ தூரம் நடந்து வடமேற்கு சீனாவிலுள்ள ஷென்சி மாகாணத்தை வந்தடைந்தனர்.

1940 : இந்தியாவில் இந்தியப் பாதுகாப்புச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது.

1943 : ஏறக்குறைய 60000 நேசப்படை வீரர்கள், பர்மிய வீரர்களின் களப்பலிக்குப் பின்னர் பர்மாவில் புகையிரதப் பாதைகள் அமைத்து முடிக்கப்பட்டன.

1945 : சீனாவின் சியாங்கே ஷேக் உடைய அரசு தாய்வானை மீண்டும் சீனாவுடன் இணைத்துக்கொண்டது. 1943 ஆம் ஆண்டு ஜப்பானுக்கும் சீனாவுக்கும் இடையே கெய்ரோவில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாக இந்த இணைப்பு ஏற்பட்டது. 1895 ஆம் ஆண்டில் ஜப்பான் இந்தத் தீவைக் கைப்பற்றிக்கொண்டது.

1966 : ரஷ்யாவினால் இந்தமாதம் 22 ஆம் திகதி நிலவை நோக்கி ஏவப்பட்ட லூணா - 14 என்ற விண்கலம் நிலவின் சுற்றுவட்டப் பாதையை அடைந்து, தெளிவான ஒளிப்படங்களை எடுத்து அனுப்பத் தொடங்கியது.

1967 : பெருவில் இராணுவப்புரட்சிமூலம் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. இராணுவம் ஆட்சியைப் பிடித்துக்கொண்டது.

1968 : ரஷ்யாவால் சோயுஸ் - 2 என்ற ஆளில்லாத விண்கலம் நிலவை நோக்கி ஏவப்பட்டது.

1971 : ஐக்கியநாட்டுச் சபையில் சீனா உறுப்பினராக இணைத்துக்கொள்ளப்பட்டது. தைவான் வெளியேற்றப்பட்டது.

1973 : ஐக்கியநாடுகள் பாதுகாப்புச் சபையினது வேண்டுகோளை அடுத்து அரபு - இஸ்ரேல் போர்நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டது. கடந்த நாற்பது நாட்களாக நடந்த இந்தப் போரில் எகிப்தின் அல் அபாடியா துறைமுகம் உட்பட 1500 தூர மைல் பரப்பளவை இஸ்ரேல் கைப்பற்றிக் கொண்டது. இதற்காக இஸ்ரேல் தரப்பில் 2700 படையினரும், 780 போர்த்தாங்கிகளும் இழக்கப்பட்டன. அரபு நாடுகளைப் பொறுத்தவரை எகிப்து 7800 படையினரையும், 580 தாங்கிகளையும், சிரியா 12000 படையினரையும், 860 தாங்கிகளையும், ஈராக் 125 தாங்கிகளையும், ஜோர்தான் 25 தாங்கிகளையும் இழந்தன.

1978 : வால் நட்சத்திரத்தின் கட்டமைப்புப்பற்றி ஆய்வு செய்வதற்காக ஏவப்பட்ட இன்ரநஷனல் கொமட்டரி எக்ஸ்புளோரர் என்ற விண்கலம் கோயோ கோபிலி சின்னர் என்னும் வால் நட்சத்திரத்தின் வால் பகுதியில் நுழைந்தது.

தொகுப்பு- சந்துரு

# கிணற்றுக்குள் தவறி வீழ்ந்த இளைஞன் உயிரிழந்தார்

கிளிநொச்சி

அதிகாலை வேளை கிணற்றில் தண்ணீர் அள்ளச் சென்ற இளைஞன் கிணற்றினுள் தவறி வீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 3.30 மணியளவில் வட்டக்கச்சி கட்சன் வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பாரதி புரத்தைச் சேர்ந்த இராசமணி தயாளகுமார் (வயது 22) என்பவரே உயிரிழந்தவராவார்.

வட்டக்கச்சி காவல் துறையினர் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணை நடத்தியதுடன் சடலத்தை மீட்டு கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். (09)

# வவுனியா எழுச்சி நாளை முன்னிட்டு கல்விச் சமூகத்துடன் கலந்துரையாடல்

வவுனியா

வவுனியாவில் நாளை மறுதினம் நடைபெறவுள்ள எழுச்சி நாளை முன்னிட்டு கலந்துரையாடல்கள் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் வவுனியா வடக்கு, தெற்கு ஆகிய வலயங்களைச் சேர்ந்த அதிபர்கள், கோட்டக்கல்வி அலுவலர்கள், கல்விச் சமூகத்தனர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து பிற்பகல் 1 மணியளவில் வவுனியா கல்வியியற்கல்லூரி ஆசிரிய பயிலுனர்களும், யாழ். பல்கலைக்கழக வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி ஆசிரிய பயிலுநர்களும், யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்களும் பங்குபற்றினர்.

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

நல்ல தலைவர்கள் என்பவர்கள் தொடர்ந்து கற்றுக் கொண்டு வருகிறார்கள். வளர்கிறார்கள். வளர்க்கிறார்கள்.

-பீட்டர் பர்வாஷ்-

## நமது நோக்கு

# கலவரத்தைத் தூண்டும் இனவாதப் பிரசாரம்!

ஜனாதிபதித் தேர்தலுக்கான நாள் நெருங்க நெருங்க, களமிறங்கி வாக்கு வேட்டையாடிவரும் பிரதான வேட்பாளர்கள் தங்கள் தங்கள் தேர்தல் பிரசார உத்திகளையும், வியூகங்களையும் பல்வேறு உள்நோக்கங்களுடன் மக்களின் மனதில் குழப்பங்களையும், பீதியையும் மட்டுமல்ல குரோத மனப்பான்மையை வளர்க்கும் வகையிலும் அமைத்து வருகிறார்கள் என்ற செய்தியானது, சமாதான நோக்கும், சமூகப் பொறுப்பும் கொண்ட அனைத்து மக்களையும் கவலையுற வைத்திருக்கிறது.

குறிப்பாக, ஏற்கனவே அரசியல் குட்டையைக் குழப்பி அதன் மூலம் பலநோக்கு ஆதாயம் தேடமுனையும் அதிபேரினவாத அரசியல் கட்சிகள், பிரதான போட்டிக்கட்சி வேட்பாளர்கள் இருவரையும் நிபந்தனை வலைக்குள் சிக்கவைத்துவிட்டு தமது அதிகார ஆளுமையை அவர்கள் மீது திணித்தபடி தம் இஷ்டப்படி அவர்களை 'ஆமாம் சாமி' போட வைத்துள்ள நிலையில்-நாட்டின் ஐக்கியம், தேசியம் குறித்து பெரிதாகப் பேசிவரும் அவர்களே அவற்றிற்குப் பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் வகையிலான இனத்துவேஷ அரசியலைத் தூண்டத் தொடங்கியுள்ளனர்.

பிரதான ஜனாதிபதி வேட்பாளரான பிரதமர் மஹிந்த ராஜபக்சவும், அவரது வெற்றிக்கு ஆதரவாக இனவாதக் கொள்கைகளை முன்வைத்து பிரசாரத்தில் இறங்கியுள்ள ஜே.வி.பியினரும், ஜாதிக ஹெல உறுமயப் பிக்குகளும் ஏனைய பௌத்த அடிப்படைவாதக் குழுக்களும், பேரினவாதக் கும்பல்களும் தமிழ் மக்களுக்கு எதிரான இனத்துவேஷக் கருத்துக்களை, உணர்ச்சிகளைத் தூண்டும் வகையில் பரந்த அளவில் பிரசாரங்களைத் தீவிரத்தன்மையுடன் மேற்கொள்ளத் தொடங்கியிருப்பதானது, தேர்தலுக்கு முன்னரோ, அல்லது தேர்தலுக்குப் பின்னரோ, மஹிந்த தோற்கும் சூழ்நிலை தென்பட்டாலோ, தோற்றாலோ, பெரும் இனக் கலவரமொன்றைத் தோற்றுவித்து அதன் மூலம் மீண்டும் நாட்டில் இரத்தக் களரியையும், அரசியல் நெருக்கடிகளையும் நிரந்தரமாக்கும் சதித்திட்டத்தின் அடிப்படையிலானதேயாகுமென தென்பகுதியிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆரம்பம் முதலே தமிழ் மக்களின் உரிமை தொடர்பான அரசியல் பிரச்சினைகளில் மேலாதிக்க சிந்தனையுடன் செயற்பட்டு, சமாதான முயற்சிகளையும், அம்முயற்சிகளில் நோர்வேயின் அனுசரணை மற்றும் சர்வதேச சமூகத்தின் ஈடுபாடு போன்றவற்றை வெளிப்படையாகவே எதிர்த்துவரும் ஜே.வி.பியினரும், ஹெல உறுமய பிக்குகளும், இலங்கைத் தீவை தமிழரும், முஸ்லிம்களும் பங்குபோட முயற்சிப்பதாகவும், சிங்களவர்களைக் கடலுக்குள் தள்ளப்போவதாகவும், அபத்தமானதும், கற்பனாவாத்தன்மை கொண்டதுமான, அபோக்கியத்தனமான அரசியல் கோஷங்களை அப்பாவிப் பாமர சிங்கள மக்கள் மத்தியில் துவேஷ உணர்வை ஊட்டும் வகையில் பரப்பத் தொடங்கியுள்ளார்கள்.

கருணையே வடிவான புத்தபகவானை அவமதிக்கும் வகையில், அவரது காவியுடையை அணிந்து போலிவேஷமிடும் அரசியல் அதிகாரவெறி கொண்ட ஹெல உறுமயவின் முன்வைக்கும் சமாதான விரோத - தமிழர் விரோத கருத்துக்களையும், செஞ்சட்டை அணிந்தபடி (போலிச்) சோஷலிஷ புரட்சியாளர்களாகத் தம்மை இனங்காட்டியபடி, பொதுவுடைமைத் தத்துவத்துக்கு எதிரான இனவாதச் சித்தாந்தங்களை நடைமுறைப்படுத்தி, இரத்தவெறி வீசும் வழமையான பாணி அரசியலைத் தொடரத்துடிக்கும் ஜே.வி.பியினரின் நகர்வுகளையும் தென்பகுதிச் சிங்கள மக்கள் எவ்வாறு எதிர்கொள்ளப்போகிறார்கள் என்பதே இப்போதைய கேள்வியாகும்.

இதேவேளை- இனவிவகாரம் தொடர்பாக இன்னமும் தீர்க்கமானதொரு கொள்கையை முன்வைக்கத் தயங்கும் ரணில் விக்கிரமசிங்க அவர்கள், சமாதானம் - போர் நிறுத்த நிலைப்பாடு எனப் பெருமைப்படப் பேசினாலும் கூட, பேரினவாத-பௌத்த மதவாத சக்திகளின் எதிர்ப்பை மீறி, அவர்களை அடக்கிவிட்டு நியாயமான தீர்வுகளையும் முன்வைக்கும் - அமுல் செய்யும் திராணியும் - தெம்புமற்ற ஒருவராக அவர் தன்னை ஒருபோதுமே அடையாளப்படுத்திக்கொண்டதில்லை. மாறாக இழுத்தடிக்கும், காலம் கடத்தி ஏமாற்றும் தந்திரோபாயத்தில் வல்ல ஒரு அரசியல்வாதியாகவே அவர் இனங்காணப்பட்டுள்ளார்.

கடந்த காலங்களில் தேர்தல் களங்களை அடுத்தும், வேறு அரசியல் நகர்வுகளை அடுத்தும் இந்த நாட்டில் இடம்பெற்ற இனக்கலவரங்களின் பின்னணிகளில் இரு பிரதான சிங்கள அரசியல் கட்சிகளும் இருந்தமை இரகசியமான விடயங்கள் அல்ல.


இதேவேளை - இனக்கலவரங்களை இந்தக் கட்சிகளும், ஏனைய பேரினவாதக் குழப்பவாத சக்திகளும் அரசியல் இலாபம் கருதியும், தமிழ் மக்களின் தேசிய எழுச்சி உணர்வை அடக்கும் நோக்குடனும், ஏற்படுத்த முனைவது இப்போது பகிரங்கமாக மேற்கொள்ளப்படும் ஒன்றாகிவிட்டது.

வடக்கு - கிழக்கு மக்கள் இந்தத் தேர்தலில் தமது அக்கறையின்மையை வெளிப்படையாகக் காட்டத் தொடங்கியுள்ள சூழலில், மலையக மற்றும் முஸ்லிம் தமிழ் மக்கள் ரணிலை ஆதரிப்பதால் சீற்றமடைந்துள்ள ஜே.வி.பியினர் தேர்தல் சமயத்திலோ அல்லது தேர்தல் முடிந்த பின்னரோ அதுவும், மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடையும் நிலை தோன்றினால் அந்த மக்கள் மத்தியில் வன்முறைகளைக் கட்டவிழ்த்து, அதனை நாடளாவிய இனக்கலவரமாக்கவும் திட்டமிட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

எதுவானாலும், எந்த இனக்கலவரமும், வன்செயலும், சிறுபான்மை மக்களை இலக்குவைத்தே அரச - பேரினவாத சக்திகளின் ஆதரவுப் பின்னணியுடன் நடத்தப்படுவதே இலங்கையின் அரசியல் கலாசாரமாகத் தொடர்ந்து வருவதால் எச்சரிக்கையாக இருக்க வேண்டியவர்கள் தமிழ் மக்களே... தமிழ் பேசும் சிறுபான்மை இனத்தவர்களே...!

*267, Navalar Road,*
*Jaffna.*
*T.P. - 021-2225107*
*www.eezhanaadu.com*

## நாடும் நடப்பும்




செய்தி : மகிந்தவின் சிந்தனைகள் இந்த நாட்டை மீண்டும் யுத்தத்தை நோக்கிய பாதைக்கு இட்டுச்செல்லப்போகிறது.

- ஐ.தே.கட்சி எச்சரிப்பு -

## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# இவரின் சிந்தனையும் அவர்களின் சந்திப்பும் எமக்குப் பயனற்றவை

சில சமயங்களில் சங்கூதியார் புத்திசாலித்தனமாகவும் சிந்திக்கிறார் என்று நினைத்தேன். ஆனால் அதுவும் கூட இரவல் சிந்தனையைக் காலங்கடந்து வெளியிட்டிருப்பதாகப் பின்னர்தான் தெரிகிறது என்று சொல்லிக் கொண்டே வந்தார் நண்பர் பரமசிவம்.

என்ன சங்கூதியாருடன் வருகிறீர். அவர் அப்படி என்ன புதிதாகத் தெரிவித்துவிட்டார்? என்று கேட்டேன்.

இலங்கை வானொலியில் வழமைபோல அவருடைய அறிக்கையொன்று முக்கியத்துவம் கொடுத்து நேற்றுமுன்தினம் ஒலிபரப்பப்பட்டதை நீர் கேட்கவில்லையா? அதாவது ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுபவர்களில் முக்கிய வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்கவும், மஹிந்த ராஜபக்ஷவும் இந்தத் தேர்தலில் வாக்களிப்பு முடியுமுன்னரே இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாக இருவரும் பேசி ஒரு முடிவு கண்டு அறிவிக்கவேண்டுமென்று சங்கூதியார் தெரிவித்திருக்கிறார் என்று பரமசிவம் சொன்னார்.

தென்னிலங்கையில் ஆட்சி பீடத்துக்குப் போட்டி போடும் ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தமிழ் மக்களின் பிரச்சினை சம்பந்தமாகத் தங்களுக்குள் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்து, அதன் பின்னரே தமிழ்த் தலைமையுடன் பேசுவதற்கு முன்வருவதே பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்குப் பொருத்தமாக இருக்கும் என்று சில ஆண்டுகளுக்கு முன்னரே தலைவர் பிரபாகரன் எடுத்துக் கூறியதாக நினைவு. இனப்பிரச்சினை சம்பந்தமாக ஐக்கிய தேசியக் கட்சி தமிழ்த் தலைமையுடன் பேசி ஒரு முடிவுக்கு வந்தால், அதை சிறிலங்கா சுதந்திரக் கட்சி எதிர்க்கும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தமிழ்த் தலைமையுடன் பேசி ஒரு உடன்பாட்டுக்கு வந்தால், அதை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கும். 1957ஆம் ஆண்டில் தந்தை செல்வநாயகத்துடன் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க பேச்சு நடத்தி ஒரு ஒப்பந்தமும் செய்தார். இதை ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி எதிர்த்து கண்டிக்கு யாத்திரை சென்றதைத் தொடர்ந்து ஒப்பந்தத்தை பண்டாரநாயக்க கிழித்தெறிந்தார். பின்னர் 1965ஆம் ஆண்டில் தந்தை செல்வாவுடன் டட்லி சேனநாயக்க இரகசிய ஒப்பந்தம் செய்தார். இதை இடதுசாரித் தலைவர் என்.எம்.பெரேரா நாடாளுமன்றத்தில் அம்பலப்படுத்தினார். ஒப்பந்தத்துக்கு இடதுசாரிகளுடன் கூட்டுச் சேர்ந்திருந்த சுதந்திரக் கட்சி எதிர்த்தது. ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. இந்த நடைமுறையே தொடர்ந்தும் இருந்துவருகிறது. இதனால்தான் தலைவர் பிரபாகரன் நீங்கள் உங்களுக்குள் ஓர் உடன்பாடு ஏற்படுத்திக் கொண்டு எங்களுடன் இனப்பிரச்சினை பற்றிப் பேசுவாருங்கள் என்று சொன்னார். இதுவரை இது நடைபெறவில்லை என்று சொன்னேன்.

இதைத்தான் இப்பொழுது தனது சிந்தனையின் வெளிப்பாடாக சங்கூதியிருக்கிறார். ஆனால், ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் இருவரும் இப்படி ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவேண்டுமென்று சொன்னால் - பொருத்தமான நேரத்தில் நல்ல யோசனை சொல்லியிருப்பதாகப் பாராட்டுவார்கள் என்று அவர் நினைத்திருக்கக் கூடும். இதை ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பு நடைபெறுவதற்கு இன்னும் சில வாரங்களே இருக்கையில் சொல்லி, இது நடைபெறக்கூடிய காரியம் என்று நினைத்தா அவர் சொல்லியிருப்பார்? 2005இல்தான் ஜனாதிபதித் தேர்தல் என்று அறிவிக்கப்பட்டதுமே இந்த யோசனையை அவர் சொல்லியிருந்தால்கூட மற்றவர்களும் இதற்கு ஆமாம் போட்டிருப்பார்கள். இப்போது வாக்குகள் தேடி இருவருமே கதவுகளைத் தட்டிக் கொண்டு எப்படி எப்படியெல்லாம் பேசி வாக்குகளைப் பெறலாம், எந்தெந்த வாக்குறுதிகளைக் கொடுக்கலாமென்று அலைந்து கொண்டிருக்கையில் இனப்பிரச்சினைக்கு முடிவுகாணவா பேசப்போகிறார்கள். இனப்பிரச்சினையை ஊதிப் பெருப்பிப்பதிலல்லவா ஆதரவாளர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதுதான் சங்கூதியார் காலங்கடந்து, காலநேரம் தெரியாமல் அரசாங்க ஊடகங்களில் தலைப்புச் செய்தி வருவதற்காக வெளியிட்ட சிந்தனை என்று பரமசிவம் சொன்னார்.

மஹிந்தவும், ரணிலும் கூடிப் பேசுவது இருக்கட்டும். ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் ரணில் விக்கிரமசிங்கவும் சந்தித்துப் பேசுவது இந்த நேரத்தில் முக்கியமான விடயம்தான். இவர்கள் முன்னரும் பேசியிருக்கிறார்கள். இப்பொழுதும் எதிர்க்கட்சித் தலைவருடன் ஜனாதிபதி பேசுவது ஆச்சரியத்துக் குரிய விடயமில்லைத்தான். எந்தப் பொது நிகழ்ச்சியி லும் பெயர் குறிப்பிடாமல் ஜே.வி.பியைக் கொலைகாரர்கள் என்று சந்திரிகா அம்மையார் பேசிவருகிறார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியைக் காப்பாற்றவேண்டுமென்றும், தனது பிள்ளைகள் அரசியலுக்கு ஒருபோதும் வரமாட்டார்களென்றும், அவர்களைக் கட்சிக்குள்ளிருப்பவர்களே கொலைசெய்துவிடக் கூடுமென்றும் சந்திரிகா அம்மையார் கூறிவருகிறார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசுவது அரசியலில் எதிர்பார்க்காத மாற்றங்களை ஏற்படுத்தக்கூடுமோ? என்று கேட்டேன்.

மஹிந்தவின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் சந்திரிகா அம்மையாரும், அவரின் தம்பி அநுராவும் கலந்து கொண்டாலும், உள்ளார்த்தமான விருப்போடு கலந்து கொள்வதாகவோ, மஹிந்தவின் வெற்றிக்காக உள்ளத் தூய்மையோடு ஆதரவு கேட்பதாகவோ தெரியவில்லை. இந்தக் கூட்டங்களில்கூட ஜே.வி.பியை பெயர் சொல்லாமல் சாடத் தவறுவதில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சாதனைகளையும், தியாகங்களையும்தான் அவர் எடுத்துக்கூறி வருகிறார். மஹிந்தவை ஆதரியுங்கள் என்று பேசி முடிக்கிறார். அவரது பேச்சுத் திறமையைப் புரிந்துகொண்டவர்கள் விளங்கிக் கொள்வார்கள். தேர்தலுக்குப் பின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும் ஐக்கிய தேசியக் கட்சியையும் இணைக்காவிட்டாலும், இரு கட்சிகளுக்கிடையிலும் இணக்கம் ஏற்படுவதற்கும் சமஷ்டி ஆட்சி அமைப்பு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது சம்பந்தமாக உடன்பாடு ஏற்படுத்துவதற்கும் முயற்சி மேற்கொள்ளப்படலாம்.

ரணில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால், மஹிந்தவும் மற்றும் சிலரும் சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறி ஜே.வி.பியுடன் சேரும் வாய்ப்பும் ஏற்படலாமென்றும் கருதுவதற்கு இடமிருக்கிறது என்று சொல்லிக்கொண்டு புறப்பட்ட பரமசிவம்,

சற்று நின்று, இது அவர்களுக்கிடையிலுள்ள அதிகாரப்போட்டி, அவர்கள் எந்தநேரமும் எப்படியும் மாறுவார்கள். எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் எங்கள் தாயகத்தில் உரிமையுடன் உயிர்வாழும் பிரச்சினை. எங்கள் பிரச்சினைக்கும் இந்தத் தேர்தலுக்கும் என்ன தொடர்பு என்று கேட்டுவிட்டுப் போனார்.

தேர்தல் அறிக்கை ... சிலம்பு

# தேர்தல் அறிக்கைகளும் தமிழ்த் தேசிய இனமும்




சந்திரிகா சமஷ்டி பற்றிப் பேசி வரும் அதே நேரத்தில் மகிந்த ராஜபக்ஷ ஒற்றை ஆட்சிக்குள் தீர்வு காணப்போவதாக அறிவித்துள்ளார். இது எந்தளவுக்கு சாத்தியப்படும் என்பது எவருக்குமே புரியாத புதிராகும்.

அடுத்ததாக சமாதானத்தைக் கட்டி எழுப்புவதற்குப் பேச்சு வார்த்தை மீதே நம்பிக்கை வைத்துள்ளதாக அவர் அறிவிக்கின் றார். மோதலுடன் தொர்புடைய சகல தரப்பினர்களுடனும் குறித்த இலக்கை எதிர்பார்த்து, சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப் படும் எனக் கூறுகின்றார். 'மோதலுடன் தொடர்புடைய சகல தரப்பினர்களுடனும்' என்று குறிப்பிடுவதன் மூலம் புலிகள் தவிர்ந்த ஆயுதக் குழுக்களையும் உள்ளடக்கியதான பேச்சுவார்த்தை என்று பொருள் கொள்ள முடியும். ஏனெனில் சர்வதேசம் புலிகளுடன் பேசிப்பிரச்சினைக்குத் தீர்வு காணும்படி கூறுகையில் - மகிந்த 'புலிகளுடன் பேசி' எனக் குறிப்பிடாதது உள்நோக்கம் கொண்டதாகவே கருத வேண்டியுள்ளது. இது பேச்சு வார்த்தையை இழுத்தடித்துக் காலம் கடத்தும் செயலாகவும், உலகத்தை ஏமாற்றும் நடவடிக்கையுமாகவே கருதப்படும்.

**பகுதி - 03**

மோதலுடன் சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ள மகிந்த ராஜபக்ஷ தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த நிபந்தனைகள் விதிக்கின்றார்.

1. புலிகள் பிரிவினையைக் கைவிட வேண்டும்.

2. ஆயுதங்களை கீழே வைக்க வேண்டும்.

3. இறுதித் தீர்வுக்கு இணங்க வேண்டும்.

4. அதனை நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இந்த நான்கு நிபந்தனைகளை விதித்துள்ளார் மகிந்த ராஜபக்ஷ. இவை தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத நிபந்தனைகளாகும். ஆயுதங்களை தமிழ் மக்கள் எடுத்ததனால் தான் இன்று பேச்சுவார்த்தை என்று சொல்லுகின்றது அரசு. இந்த நிலையில் ஆயுதங்கள் இல்லாவிட்டால், மகிந்த சொல்லும் அல்லது திணிக்கும் தீர்வை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலைதான் தமிழினத்துக்கு ஏற்படும். அத்துடன் துன்பப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பற்றிச் சிந்திக்காத இறுதித் தீர்வுக்கு இணங்கவேண்டும். இந்தத் தீர்வு ஒற்றையாட்சிக்குள்ளேயே அமையும் அதனை நடைமுறைப்படுத்தப் புலிகள் சம்மதிக்கவேண்டும். பதினெண்ணாயிரம் மாவீரர்களைக் கண்ட தமிழினத்தைப்பார்த்துப் புதிய சிந்தனைகளை விதிக்கிறார் மகிந்த ராஜபக்ஷ.

அடுத்ததாக அவர் கூறுவது போர்நிறுத்தம் மீளாய்வு செய்யப்பட்டு, கௌரவமான சமாதானத்தை ஏற்படுத்துவது குறித்ததாகும். போர் நிறுத்தம் செய்யப்பட்டும் சரியாக அது கொண்டு செல்லப்படவில்லை என்பதே தமிழர் தரப்புக்குறையாகும். எனவே சரியான முறையில் போர்நிறுத்தத்தை அமுல்படுத்தவே முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பது விடுதலைப் புலிகளின் கோரிக்கையாகும். ஆனால் மகிந்த ராஜபக்ஷ போர் நிறுத்தம் மீளாய்வு செய்யப்படும் என்று கூறியுள்ளார். இரு பகுதியினர் செய்து கொண்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை மறுதரப்பினரின் சம்மதமின்றி மீளாய்வு செய்ய முடியுமா? அவ்வாறான நிலையில் போர் நிறுத்தம் கேள்விக் குறியாகி மீண்டும் போர் தொடங்கும் சூழ்நிலை தானே ஏற்படும். எனவே போர் நிறுத்த மீளாய்வு என்ற தன்னிச் சையான முடிவுபோருக்கான அழைப்பாகவே கருதப்படமுடியும்.

இத்துடன் நில்லாது 'கௌரவமான சமாதானத்தை' ஏற்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றப்போவதாகக் கூறியுள்ளார். இவ்வாறு கூறும் பொழுது தற்பொழுது உள்ள சமாதான உடன்படிக்கை கௌரவமானதல்ல என்று அவர் விளக்கம் கொடுக்கின்றார். நாட்டின் பிரதமரோ, ஜனாதிபதியோ நாட்டின் சில இடங்களுக்குப் போக முடியாத ஒப்பந்தமே தற்போது உள்ளதாகவும், எனவே எட்டப்படும் உடன்படிக்கை இந்தக் கௌரவமற்ற தன்மையை நீக்குவதாக அமையவேண்டும் என்று குறிப்பிடுகிறார் அவர். அதாவது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி என்று ஒன்று இருத்தலாகாது என்று குறிப்பிடுகிறார். உண்மையில் சமாதானத்தின் பின்னரா இவ்வாறான ஒரு பகுதி உண்டானது? புலிகள் பாரிய சமர்களின் மூலம் விடுவித்துத் தனி நிர்வாகம் செய்து வருவதைச் சர்வதேச சமூகம் அங்கீகரித்துள்ளது. அங்குள்ள நிர்வாகக் கட்டமைப்பைச் சர்வதேச சமூகம் போற்றுகின்றது. இதை இப்படியே விடக் கூடாது, இதனை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்ற அடிப்படையிலேயே 'கௌரவமான சமாதானம்' என்று கூறுகின்றார் அவர். இதில் இன்னொரு வேடிக்கையான அம்சம் என்னவென்றால், சமாதான ஒப்பந்தத்துக்கு முன்னர் பிரதமரோ, ஜனாதிபதியோ அலரி மாளிகைக்குள்ளும், ஜனாதிபதி மாளிகைக்குள்ளும் சிறையிருந்தனர் என்ற உண்மையேயாகும். சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டிருக்காவிட்டால், நிலைமை இன்றும் அதே போன்று இருந்திருக்கும் என்பதேயாகும். புதிதாகத் தொடங்கி , யுத்த நிறுத்தம் செய்து, கௌரவமான சமாதானம் ஏற்படுத்துவது என்ற மகிந்தவின் சிந்தனை யதார்த்தமற்றதும் மீண்டும் யுத்தத்துக்கு வழிவகுப்பதாகவுமே அமையும்.

இதனையடுத்து சுனாமிக்கான பொதுக்கட்டமைப்பு நீக்கப்படும் என்றும், புதிய ஒரு சபை நிறுவப்படும் என்றும் கூறியுள்ளார். பிரதமரின் பெயரில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு சட்ட வடிவைப் பிரதமரே நீக்குவேன் என்று தேர்தல் அறிக்கையில் குறிப்பிடுகிறார். இந்தப் பொதுக்கட்டமைப்பினாலேயே ஜே.வி.பி கூட்டு அரசிலிருந்து விலகியது. அவர்களின் ஆதரவுடன் பதவியைக் கைப்பற்றும் நோக்கில் ஜே.வி.பியின் கோரிக்கையும், ஹெல உறுமயவின் கோரிக்கையையும் ஏற்றுத்தான், ஏற்கனவே ஏற்றுக் கொண்ட பொதுக்கட்டமைப்பை இரத்துச் செய்யப் போவதாக அறிவித்துள்ளார். சந்திரிகா வெளிநாடுகளின் ஆலோசனைக்கு அமையக் கொண்டு வந்த பொதுக்கட்டமைப்புக்கு ராஜபக்ஷ கொடுக்கும் மதிப்பு இவ்வளவே.

(தொடரும்...)

வாரநோக்கு... - யாழவன்

# மீண்டும் போர் தொடங்கும் காலத்தை நிர்ணயிக்கப்போகும் ஜனாதிபதித் தேர்தல்!

ஜனாதிபதி தேர்தல் களம் சூடுபிடிக்க ஆரம்பித்துவிட்டது. கனவுகளில் கண்ட விடயங்கள் எல்லாம் தேர்தல் விஞ்ஞாபனங்களாக வெளியிடப்பட்டுள்ளன. அதிலும் பிரதமர் மஹிந்தராஜபக்ஷவினால் வெளியிடப்பட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்திலே எந்தவிதமாகவேனும் நாட்டு நலன்கள் முன்னிறுத்தப்பட வில்லையென்றே குறிப்பிடமுடியும். தேர்தல் வெற்றியை மட்டும் இலக்காகக் கொண்டு சில தரப்பினரை விலைக்கு வாங்க முற்படும் நடவடிக்கையாகவே அவரது பல தேர்தல் விஞ்ஞாபன சரத்துக்கள் அமைந்துள்ளன.

அவ்வாறே, அவரோடு இணைந்து கூட்டணி அமைத்துச் செயற்படும் கட்சிகளின் நடவடிக்கைகளும் அமைந்துள்ளன. அதிலும் தமிழ் மக்களுடைய வாக்குகளை விலைக்கு வாங்கும் நடவடிக்கைகளிலேயே தரகர்களாகச் செயற்படும் கட்சிகளாக அவை உள்ளன.

யாழ்ப்பாணத்து தமிழ் மக்களுடைய வாக்குகளை விலைக்கு வாங்கும் நடவடிக்கையில் தற்போது ஈடுபடத் தொடங்கியுள்ளன. அதன் ஆரம்ப கட்டமாக, தற்போது அவை ஈ.பி.டி.பி கட்சியின் செயலாளர் நாயகமாக வுள்ள டக்ளஸ் தேவானந்தாவின் கீழுள்ள அமைச்சின் வழியாக இளைஞர், யுவதிகளுக்கான வேலை வாய்ப்புப் பயிற்சி நெறி ஒன்றை ஆரம்பித்து, அந்த இளைஞர்களை வைத்து தேர்தல்க்கால செயற்பாடுகளை மேற்கொள்ள முயற்சிகளை எடுத்துவருகிறது. இவ்வாறான நடவடிக்கையையே முன்னர் நடைபெற்ற 2001ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போதும் ஈ.பி.டி.பி கடைப்பிடித்தமை தெரிந்த விடயமே.

அப்போது க.பொ.த(சா/த) பரீட்சையில் சித்தியடையாத இளைஞர், யுவதிகளை தெரிந்தெடுத்து அவர்களுக்கு தொழில் பயிற்சிகள் எனும் போர்வையின் கீழே, தும்புத்தொழில், தோல் கைத்தொழில், இலத்திரனியல் பயிற்சிகள் என்பவற்றைச் சில மாதங்களுக்கு வழங்கிவிட்டு பின்னர், உங்களுக்கு நாம் அரசவேலை தருவோம் என உறுதி வழங்கி அவர்களது சுயவிருப்பமின்றி அவர்களைத் தேர்தல் பிரசாரப் பணிகளிலும், கள்ளவாக்குப் போடும் பணிகளிலும் ஈடுபடுத்தியது ஆனால், அவர்களுள் அதிகமானோர் ஈ.பி.டி.பியின் கீழ் இருந்து கொண்டு அவர்களுக்கே துரோகம் செய்து தமிழர் விடுதலைக் கூட்டணிக்குத் தமது வாக்குகளை அளிக்க, ஈ.பி.டி.பி மூன்று ஆசனங்களை மட்டுமே பெறமுடிந்தது.

இந்த நிலையில் வேலைகிடைக்கும் என நம்பியிருந்த இளைஞர்கள், யுவதிகள் நடுத்தெருவிலே விடப்பட்டனர். அவர்களின் பிரசாரத்துக்கு மயங்கிய சில இளைஞர், யுவதிகள் ஈ.பி.டி.பி உறுப்பினர்களாகவும் மாற்றப்பட்டனர். அத்துடன் வேலை வாய்ப்புப் பயிற்சிகளுக்கு எனச் சென்ற யுவதிகள் மீது வேறுவகையான துன்புறுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த சில யுவதிகள் சம்பந்தப்பட்டோரிடம் இது தொடர்பாக கவனத்துக்கொண்டு வந்த போது, அவ்வாறான துர்நடத்தைகளிலே ஈடுபட்ட நபர்கள் தண்டிக்கப்பட்ட சம்பவங்களும் நடைபெற்றன.

இவ்வாறு பல விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்துவதாகவே அந்த வேலைவாய்ப்புப் பயிற்சி நெறிகள் அமைந்திருந்தன. அத்தகையதொரு செயற்பாட்டின் தொடர்ச்சியாகவே தற்போதும் தொழில்சார் பயிற்சிகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாகச் சந்தேகிக்கவும் இடமுண்டு. இது தொடர்பிலே சம்பந்தப்பட்ட இளைஞர், யுவதிகள் அதிக கவனமெடுத்துக் கொள்ள வேண்டும். தமது சொந்த நலனுக்காக அப்பாவி இளைஞர், யுவதிகளை பலிக்கடாக்களாக மாற்றுவதை எமது சமூகம் ஒரு போதும் அனுமதிக்கக்கூடாது. இது தொடர்பிலே சமுதாய நலன்விரும்பிகள் விழிப்பாக இருக்கவேண்டும்.

வாரநோக்கு...

இதேவேளை இன்னுமொரு விடயத்தையும் நாம் கவனத்திற் கொள்ளவேண்டிய தேவையுள்ளது. அண்மையிலே படுகொலை செய்யப்பட்ட இரு பாடசாலை அதிபர்களையும், புலிகள் தான் கொலை செய்தார்கள் என எதுவித ஆதாரங்களுமின்றித் தொடர்ச்சியாகப் பிரசாரம் செய்வதன் மூலம், யாழ்ப்பாண சமூகத்தை தவறான நோக்கிலே சிந்திப்பதற்குத் தூண்டப்பட்டுகிறது. அதன் விளைவாக தமக்குச் சார்பான ஒரு சில மாணவர்களை பகடைக் காய்களாகப் பாவித்து, இந்தச் சம்பவத்துக்கு கண்டனம் வெளியிடுகிறோம் எனும் தோரணையிலே யாழ்.கல்விச் சமூகத்தின் அன்றாட கல்விச் செயற்பாடுகளைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளும் நடைபெற்றது. இதிலும் பாரியளவிலான அரசியல் சதித்திட்டங்கள் பின்னணியிலே வரையப்பட்டுள்ளன. குடா நாட்டுச் சமூகம் கல்விக்கு அளித்து வரும் முக்கியத்துவத்தை கவனத்தில் கொண்டு அதனை இலக்காக வைத்தே தேசவிரோதச்சக்திகள் தமது காய்களை நகர்த்தி வருகின்றார்கள். எனவே இது விடயத்திலே எதிர்காலச் சமூகமான மாணவர்கள் கவனமாக இருக்க வேண்டும்.

இன்னும் குடாநாட்டுச் சமூகத்தை ஏமாளிகளாக நினைக்கும் சுயநலப் போக்குடைய அரசியல்வாதிகளின் முகமூடிகளை கிழிப்பதற்கு மக்கள் தயாராக இருக்கவேண்டும். எதிர் வரும் ஜனாதிபதித்தேர்தல் தொடர்பிலே விடுதலைப் புலிகளுடைய நிலைப்பாடானது எந்த வேட்பாளரையும், சார்ந்த நிலைப்பாடாக இல்லாத சூழ்நிலையிலே மக்களை திசை திருப்புவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளன. எனவே இந்தச் சந்தர்ப்பத்தில் கடந்த கால அரசியல் வரலாறுகளையும், கடந்து வந்த பாதைகளையும், தற்போதைய சூழ்நிலையினையும் கவனத்திற்கொண்டு வாக்களிக்க விரும்புவோர் வேட்பாளரைத் தெரிவு செய்யவேண்டும்.

மேலும் இந்த முறை தேர்தலிலே மஹிந்த ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்டுள்ள அநேகமான கோரிக்கைகள் ஜே.வி.பியினால் முன்னர் சந்திரிகாவிடம் முன் வைக்கப்பட்டவையே ஆகும். அரசிலே தொடர்ந்து, ஜே.வி.பி அங்கத்துவம் பெற வேண்டுமாக இருந்தால் பொதுக் கட்டமைப்பு ரத்துச் செய்யப்படவேண்டும், யுத்த நிறுத்த ஒப்பந்தம் மீள்பரிசீலனை செய்யப் படவேண்டும், ஒற்றையாட்சியின் கீழேயே தீர்வு காணப்பட வேண்டும் என ஜே.வி.பி விடுத்த கோரிக்கைகளே தற்போது பூசி மெழுகப்பட்டு மஹிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனமாக வெளியிடப்பட்டுள்ளது. அப்பாவிச் சிங்கள மக்களை ஏமாற்றும் நோக்கிலே- சமாதான வழியிலே ஒற்றையாட்சி மூலம் தீர்வு என சோடிக்கப்பட்டுள்ளது.

ஒற்றையாட்சி மூலம் தீர்வு காண விழையும் ஏற்பாடுகள் சமாதானச் சூழலைச் சீர்குலைக்கும் நடவடிக்கையாகவே அமையும். ஏனெனில், இலங்கை இனப் பிரச்சினை விடயத்துக்கு ஒற்றையாட்சி முறை ஒரு தீர்வாக அமைய மாட்டாது என சர்வதேச தரமிக்க அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ள சூழ்நிலையிலேயே, சமஷ்டி முறை தீர்வையொட்டியதாக பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதுவும் இறுதியாக இடைக்கால தன்னாட்சி அதிகார சபை எனும் விடயத்திலேயே வந்து தடைப்பட்டுப் போனது. தமிழர் தரப்பானது தான் ஏலவே கற்றுக்கொண்ட பாடத்தினை அடிப்படையாக வைத்து "தன்னாட்சி" எனும் விடயத்திலேயே என்றும் உறுதியாக வுள்ளது. எனவே, இந்த நிலையில் ஒற்றையாட்சி முறை பற்றிப் பேசுவது தற்போதைய சூழலை மேலும் நெருக்கடிக்குள்ளே தள்ளும் வகையிலேயே அமையும்.

அத்துடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம் மீள்பரிசீலனை செய்யப்படும் விடயமானது, என்றுமே சாத்தியமற்றதொன்றாகவே அமையும். ஏனெனில், ஏற்கனவே செய்யப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையானது இன்றும் நடைமுறையிலுள்ளதா? என்ற கேள்வி எழுந்துள்ளது. இரு தரப்பினருமே யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறுகிறார்கள் என ஒவ்வொரு தரப்பும் மறுதரப்பை குற்றம் கூறி வருகிறது. அண்மையில் கூட இலங்கை விமானப்படை வசமிருந்த இறுதி ஆளில்லா வேவுவிமானமும் விடுதலைப் புலிகளுடைய கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளே வேவு பார்த்தபோது வீழ்ந்து நொருங்கியுள்ளது. இது விடுதலைப் புலிகளால் சுட்டுவீழ்த்தியிருக்கப் படலாம் எனச் சந்தேகம் நிலவிய போதும், அது தவறானது எனத் தற்போது யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒரு பகுதியின் கட்டுப்பாட்டு எல்லைக்குள்ளே மறுதரப்பினர் அனுமதியின்றி நுழையும் போது அது போர் நிறுத்த மீறலாகும். இதுவே தானியங்கி வேவு விமானத்தின் விடயத்திலும் நடைபெற்றுள்ளது. எனவே அனுமதியின்றி உள்நுழைந்ததன் விளைவாக அரச தரப்பே யுத்த நிறுத்த மீறலில் ஈடுபட்டுள்ளது. இதனாலேயே இந்த விடயத்தை பெரிதுபடுத்திப் பேசாமல் அரச தரப்பு மௌனம் காத்து வருகிறது.

இந்த நிலையில் மகிந்தவினால் முன்வைக்கப்பட்டுள்ள யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீள் பரிசீலனை செய்யும் யோசனையானது மீண்டுமொரு யுத்தத்துக்கான வழிமுறையைத் தோற்றுவிக்கும். எனவே மஹிந்த-ஜே.வி.பி. கூட்டணியானது- புதிய மொந்தையில் தமது பழைய கள்ளையே ஊற்றியுள்ளது. இதனைப் பருக நினைக்கும் மக்களின் நிலைதான் பரிதாபமானது. அதிலும் சிங்கள மக்கள் தெளிவாகச் சிந்திக்காது எடுத்த எடுப்பிலே ஏமாந்து போவார்களாக இருந்தால் மிகப் பெரிய வர லாற்று தவறு ஒன்றை இழைத்த நிலை ஏற்படும்.

மேலும் மஹிந்தவினுடைய இந்த விஞ்ஞாபனமானது நகைப்புக்கிடமானதாகவும், நாட்டு நலனுக்கு எந்த விதத்திலும் உதவும் திறனற்றதாகவும் உள்ளது. உதாரணமாக, நாட்டிலுள்ள பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கு தீர்வையற்ற வாகனங்கள் வழங்குதலும், நிருபர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்குவதும் ஊடகங்களை விலைக்கு வாங்க நினைக்கும் செயலாகும். இது மஹிந்தவின் இயலாமைத் தன்மையின் வெளிப்பாடாகக்கூட இருக்கலாம். சில நேரங்களில் தனது வெற்றியிலே மஹிந்தவுக்குக் கூட நம்பிக்கையற்ற சூழ்நிலை காணப்படுவதையே இவை உணர்த்துவதாகவுள்ளது. இது எல்லாமே ஜே.வி.பி, ஹெல உறுமயவுடன் அவர் ஏற்படுத்திக் கொண்ட கூட்டின் விளைவே ஆகும். பேசாமல் சுதந்திரக் கட்சியுடன் இருந்திருந்தால் தேர்தலிலே நின்று வென்றிருக்க முடியும். தோற்றாலும் கௌரவமாகத் தோற்றி ருக்க முடியும்.

மாறாக மஹிந்த கூட்டணி வெற்றி பெறுமாக இருந்தால் நிச்சயமாக ஒரு போரை எதிர் பார்க்க முடியும். ஏனெனில், அந்தக் கூட்டணியால் என்றுமே சமாதானத் தீர்வு தொடர்பாகப் பேசவே முடியாதநிலை ஏற்படும். எனவே, இதற்குத் தீர்வு போராகவே அமையும். எதற்கும் விடை இன்னும் ஒரு மாதத்திலே தெரிந்துவிடும்.

# பிரஷெல் 'எழுக தமிழ்' பேரணியில் இருந்து...






















# தமிழீழ அரசின் தேசியக் கொடி ஐ.நா.சபையில் விரைவில் பறக்கும்!

## 'எழுக தமிழ்' நிகழ்வில் கஜேந்திரன் எம்.பி.

பிரசெல்ஸ்

தமிழீழத்தில் தற்போதுள்ள நடைமுறை அரசின் தேசியக்கொடி விரைவில் ஐக்கிய நாடுகள் சபையில் பறக்கும் என்று - பெல்ஜியத்தில் நேற்று நடைபெற்ற தமிழர் வாழ்வுரிமை முழக்கப்போராட்டத்தில் பேசிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய அவர் -

உங்களைப் பார்க்கும்போது எங்களுடைய மண் எங்களுடைய கைகளிலே வந்துசேரும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. இந்த உணர்ச்சிகளைக் கேட்டறியும் தேசியத் தலைவர் மகிழ்ச்சியடைவார் என்பதில் சந்தேகமில்லை.

வன்னிக் காட்டில் இருந்தாலும் புலம்பெயர் தமிழ் உறவுகள் எத்தகைய உணர்வோடு இருக்கிறார்கள் என்பதைத்தேசியத்தலைவர் அறிவார்.

தேசியத் தலைவர்தான் நம்மை சர்வதேச அளவில் தலைநிமிர வாழ வைத்திருப்பதாக நாம் எண்ணுகிறோம். ஆனால், தன்னுடைய மக்களால்தான் தமிழர்கள் இன்று சர்வதேசத்தில் தலைநிமிர்ந்து நிற்க முடிந்திருக்கிறது என்று தேசியத் தலைவர் கருதுகிறார்.

அதனை நிரூபிக்கும் வகையில் உணர்வுபூர்வமாகப் பெரும் எண்ணிக்கையில் இங்கே கலந்து கொண்டுள்ளீர்கள்.

இந்தக் கூட்டத்தைப் பார்க்கும் ஐரோப்பிய சமூகத்தவர்கள் - தமிழர்களது நியாயப்பாடுகளைப் புரிந்து கொள்வார்கள் என்ற திடமான நம்பிக்கை எமக்கு உண்டு.

பெல்ஜியத்தில் பூரணத்துவமான கட்டமைப்பு நமக்கு இல்லை. இருப்பினும் இந்தப் பேரணியை வெற்றிகரமாக ஒழுங்குபடுத்தியுள்ளீர்கள். தமிழர்களின் வலு இப்போது புரியும்.

தமிழ்த் தேசியத்தின் மீதும், தமிழீழ தேசியத் தலைவர் மீதும் கொண்டிருக்கும் பற்றும், பாசமும், வெறியும் இப்போது ஐரோப்பியர்களுக்குப் புரியும்.

எதிர்வரும் காலங்களில் ஐரோப்பிய ஒன்றியம் தனது முடிவை மறுபரிசீலனை செய்யும் சூழ்நிலை உருவாகும்.

தன்னிகரில்லாத் தலைவன் காலத்திலே தமிழர் விடுதலைக்கான தீர்வை எட்ட வேண்டும்.

இலங்கைத் தீவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. அந்தத் தேர்தல் தீர்வைத் தருமா என்ற அவா நம் மக்களிடத்தில் உள்ளது.

தென்னிலங்கையில் யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்கள் செய்யப் போவதை தீர்மானிப்பது நாம் தான். ஆதலால் இராணுவம் மற்றும் அரசியல் ரீதியாகத் தலைவரின் கரங்களை வலுப்படுத்துவோம். நமது உரிமையை மீட்டெடுப்போம்.

நமக்கு தரைப்படை, கடற்படை, வான்படை உண்டு. நாட்டை நிர்வகிக்கும் அரச கட்டுமானங்கள் நிறைவாக உள்ளன.

தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் 70 வீதமான நிலப்பரப்பு மீட்கப்பட்டுவிட்டன. நாம் மீட்க வேண்டியது வெறுமனே 30 வீதமான நிலப் பகுதிதான்.

இதை மீட்பது இலகுவான காரியம். தாயகத்திலிருக்கும் உங்களுடைய உறவுகள் மீது திணிக்கப்படவிருக்கும் போருக்கு தயாராக - எல்லைப்படை, துணைப்படையாக அணிவகுத்து பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தலைவரின் கட்டளையை நிறைவேற்ற தாயக மக்கள் தயாராக இருக்கிறார்கள். எங்கள் மீது போர் திணிக்கப்படும்போது உரிய ஆயுதங்களையும், வளங்களையும் வழங்க வேண்டிய கடப்பாடு உங்களுக்கு உண்டு.

ஓயாத அலைகளின் வெற்றியிலும், ஆனையிறவின் வெற்றியிலும் உங்களது பங்களிப்பு பாரியது. தற்போதைய நடைமுறை அரசிலும் உங்களின் பங்களிப்பு பாரியது. உங்களது உதவிகள்தான் நடைமுறை அரசை இயக்கிக் கொண்டு இருக்கிறது.

நமக்கான விடுதலை வெகுதூரத்தில் இல்லை. நம் மக்கள் தலைவரின் பின்னால் அணிதிரண்டு இருக்கிறார்கள். எங்களுடைய மண்ணிலே கால் பதித்து மாசுபடுத்தி நிற்கும் சிங்களப் படை விரைவில் வெளியேற்றப்படும்.

இனியொரு யுத்தம் வந்தால் சிங்களப் படை வெளியேற்றப்பட்டு, ஓரிரு வாரங்களில் தமிழர் மண் புனித மண்ணாகிவிடும்.

தமிழீழத்தில் தற்போதுள்ள நடைமுறை அரசின் தேசியக் கொடியை ஐக்கிய நாடுகள் சபையில் விரைவில் பறக்கச் செய்வோம் என கஜேந்திரன் மேலும் தெரிவித்தார்.

# தலைவர் பிரபாகரனின் காலத்திலே நாம் தமிழீழத்தை வென்றெடுப்போம்!

## பிரஷெல்சில் திருமாவளவன் சூளுரை

பிரஷெல்ஸ்

தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரகாபரனின் கீழ் - அவர் வாழும் காலத்திலேயே நாம் தமிழீழத்தை வென்றெடுப்போம் எனச் சூளுரைத்தார் தொல்.திருமாவளவன்.

பிரஷெல்சில் 'எழுக தமிழ்' நிகழ்வின் தொடக்கத்தில் விடுதலை சிறுத்தைகள் இயக்கப் பொதுச் செயலாளர் தொல்.திருமாவளவன் பேசியபோது மேலும் தெரிவித்தாவது -

மாவீரன் நெப்போலியனையும், அலெக்சாண்டரையும் ஒன்றிணைத்த தலைவர் அண்ணன் பிரபாகரன்.

பின்னர் தமிழர்களை நசுக்குவதற்கு அமெரிக்காவின் உதவியை சிறிலங்கா இராணுவம் நாடியது.

அண்ணன் பிரபாகரன் இராணுவ ரீதியாக எடுத்த ஒவ்வொரு முடிவும் உலகத்தின் கண்களை அகல விரித்துக்காட்ட வைத்திருக்கிறது. வியப்பில் ஆழ்த்த வைத்திருக்கிறது.

ஒட்டுமொத்தத்திற்குமான தலைவன் பிரபாகரன் - தமிழீழத்துக்கு மட்டுமல்ல, தமிழகத்துக்கும் தலைமை தாங்குகிற தலைவர் பிரபாகரன்தான்.

அவரது தலைமையின்கீழ், அவர் வாழும் காலத்திலேயே நாம் தமிழீழத்தை வென்றெடுப்போம்.

ஐரோப்பிய ஒன்றியமே! புலிகளின் போக்குவரத்து தடையை நீக்கு!

ஐரோப்பியக் கூட்டரசே! உன் செவிகளுக்கு எட்டுகிறதா? தடையை விலக்கு விலக்கு!

தமிழர் வீரம் வெல்லும்! அதைக் காலம் சொல்லும்

என திருமாவளவன் தெரிவித்தார்.

பின்னர் ஜேர்மனியின் அல்பேர்ட் போல் அடிகளார் ஜேர்மனிய மொழியில் உரையாற்றுகையில் -

தமிழ் மக்களின் கனவானது தமிழீழம் என்பதை நாம் நன்றாக அறிவோம். மக்கள்பட்ட கஷ்ரங்களை அறிந்துகொண்டோம்.

